தினமணி

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.11.2013**

**கோமாரி நோய்: விழிப்புணர்வு ஏற்படுத்த வலியுறுத்தல்**

விழுப்புரம் மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் கோமாரி நோய்த் தடுப்பு குறித்த விழிப்புணர்வு முகாம்களை நடத்த வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் கோமாரி நோய் கால்நடைகளை தாக்கி வருகிறது. இந்த நோயை தடுப்பது குறித்தும், தடுப்பூசி போடுவது குறித்தும் விழிப்புணர்வு முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன. மூங்கில்துறைப்பட்டு அருகே பொரசப்பட்டு கிராமத்தில் இது தொடர்பான விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

முகாம்களை மாவட்டத்தின் அனைத்து ஊராட்சிகளிலும் நடத்த ஊராட்சிமன்றத் தலைவர்களுக்கு மாவட்ட நிர்வாகம் உரிய உத்தரவுகளை பிறப்பிக்க வேண்டும் என்று சமூக ஆர்வலர்கள் வலியுறுத்துகின்றனர்.

**கோமாரி நோயால் கால்நடைகள் சாவு**

திருக்கோவிலூர் அருகே கோமாரி நோயால் கால்நடைகள் அதிகளவில் உயிரிழந்து வருகின்றன.

திருக்கோவிலூர் அடுத்துள்ள ரிஷிவந்தியம் ஒன்றியம், ரெட்டியார்பாளையம், மேட்டூர், எடுத்தனூர் உள்ளிட்ட பகுதிகளில் கோமாரி நோய் பாதிப்பால் 15-க்கும் மேற்பட்ட ஆடு, மாடுகள் இறந்துள்ளன.

கோமாரி நோய் இனிவரும் மழை மற்றும் குளிர் காலங்களில் கால்நடைகளை தாக்க வாய்ப்புள்ளது. இதைத் தடுக்க தற்போது கால்நடைப் பராமரிப்புத் துறை மூலம் மருத்துவர்கள் கிராமத்துக்கு வந்து கோமாரி நோய் தடுப்பூசியை

கால்நடைகளுக்கு போட வேண்டும் என்றும், கோமாரி நோய் தாக்கி இறந்த கால்நடைகளுக்கு இழப்பீடு வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்

என்றும் கால்நடை வளர்ப்போர் கோரி வருகின்றனர்.

**சம்பா நெல் சாகுபடி செய்த விவசாயிகள் கவனத்துக்கு...**

பாகூரில் சம்பா நெல் சாகுபடி செய்த விவசாயிகள் இலை கருகல் நோயை சமாளிக்கத் தேவையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என வேளாண்மைத் துறை தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக பாகூர் வேளாண் துணை இயக்குநர் கி.சிவசுப்பிரமணியன் வெளியிட்ட அறிக்கை:

பாகூர் வேளாண் கோட்டம் உள்ளடக்கிய கிராமங்களில் தற்போது சம்பா நெல் சாகுபடியில் "பாபட்லா' என்று அழைக்கப்படும் பிபிடி-5204 என்ற நெல் ரகத்தில் புகையான் வகை வெள்ளை தத்துப்பூச்சி மற்றும் பாக்டீரியா இலை கருகல் நோய் பரவலாக உள்ளது.

வெள்ளை தத்துப்பூச்சி நெற்பயிரின் சாறை உறிஞ்சி பயிர் வளர்ச்சியை தடுக்கிறது. இதனால் பயிர் குட்டையாக காட்சி தரும்.

தாக்குதலின் போது வட்டமான மஞ்சள் நிற திட்டுக்கள் தோன்றி பின் உடனே பயிர் காய்ந்து பழுப்பு நிறமாக மாறி விடும். பின் பூச்சி தாக்கப்பட்ட திட்டுக்கள் பரவி முழு வயலையும் பாதித்து விடும். இளம் மற்றும் முதிர் பூச்சிகள் செடியின் சாறை உறிஞ்சும். பாக்டீரியா இலை கருகல் நோயால் பாதிக்கப்பட்ட பயிரின் இலை நுனி முதலில் காய்ந்து பின் இரு பக்க இலை ஓரங்களில் இருந்து நடு இலை வரை மஞ்சளாக மாறி நோய் முற்றிய நேரத்தில் காய்ந்து சருகாகி விடும். இதனால் மகசூல் பெரியளவில் பாதிக்கப்படும்.

கட்டுப்படுத்தும் வழிமுறைகள்: இவற்றைக் கட்டுப்படுத்த கீழ்காணும் வழிமுறைகளை விவசாயிகள் பின்பற்ற வேண்டும். பாதிக்கப்பட்ட வயல்களுக்கு தழைச்சத்து உரங்கள் வைப்பதை தற்காலிகமாக நிறுத்த வேண்டும். வயலில் தண்ணீர் தேங்காமல் சுத்தமாக வடித்து விட வேண்டும், பகல் நேரங்களில் மஞ்சள் நிற பொறிகளை பயன்படுத்த வேண்டும், இரவு நேரங்களில் விளக்குப் பொறிகளை வைக்க வேண்டும்.

வயல்களின் நன்றாக தண்ணீர் வடிந்த பின் மருந்து தெளிக்க வேண்டும்.

நேரடியாக மருந்தை தூர்களின் அடிப்பகுதியில் தெளிக்க வேண்டும். வெள்ளை தத்துப்பூச்சியைக் கட்டுப்படுத்த ஏக்கருக்கு 500 மில்லி மோனோகுரோட்டபாஸ் அல்லது அசஃபேட் 250 கிராம் அல்லது வேப்ப எண்ணெய் 3 சதம் கரைசல் தெளிக்க வேண்டும்.

ஆரம்ப நிலையில் உள்ள பாக்டீரியா இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்த 20 சத பசுஞ்சாண கரைசலைத் தெளிக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான 40 கிலோபசுஞ்சாணத்தை 100 லிட்டர் தண்ணீரில் முதல் நாள் இரவு ஊறவைத்து மறுநாள் காலையில் சுத்தமாக வடிகட்டி பயிரில் தெளிக்கவும். இதை செய்வதின் மூலம் பாக்டீரியா இலை கருகல் நோயைக் கட்டுப்படுத்தலாம் அல்லது ஒரு ஏக்கருக்கு ஸ்ட்ரெப்டோமைசின் 60 கிராம் அல்லது காப்பர் ஆக்ஸி குளோரைட் 500 கிராம் வீதம் கலந்து தெளிக்கலாம் என்றார் சிவசுப்பிரமணியன்.

**கருங்கல் அருகே பாம்பூரி வாய்க்கால் உடைந்து 1 லட்சம் வாழைகள் சேதம்**

கன்னியாகுமரி மாவட்டத்தில் தொடர்ந்து பெய்துவரும் மழையால் பாம்பூரி

வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டு, ஞாயிற்றுக்கிழமை கருங்கல் ஏலா பகுதி முழுவதும்  வெள்ளம் சூழ்ந்தது. இதில் சுமார் 1 லட்சம் வாழைகள் சேதமடைந்தன.

மாவட்டத்தில் அணைகளின் நீர்பிடிப்புப் பகுதிகளில் சனிக்கிழமை முதல் தொடர்ந்து பலத்த மழை பெய்து வருகிறது. கல்குளம் வட்டம், கப்பியறை பேரூராட்சிக்குள்பட்ட செல்லங்கோணம் பகுதியில் கருங்கல் ஏலாவில் சுமார் 300 ஏக்கர் பரப்பளவில் 100-க்கும் மேற்பட்ட விவசாயிகள் வாழை, தென்னை, கமுகு மற்றும் பயிர் வகைகள், கீரை வகைகள், மரவள்ளிக் கிழங்கு உள்ளிட்டவைகளை பயிர் செய்துள்ளனர்.

இங்கு விவசாயத்துக்கு முக்கிய நீராதாரமாக இருப்பது பாம்பூரி வாய்க்கால் மற்றும் செல்லங்கோணம் குளம் ஆகியவை ஆகும். இந்த வாய்க்காலில் பேச்சிப்பாறை பட்டணங்கால் பிரிவு மற்றும் திருவிதாங்கோடு பிரிவு ஆகிய பிரிவுகளிலிருந்து வெளியேறும் உபரி நீரும், மழைக் காலங்களில் மலைகள் மற்றும்

நீர் ஒடைகள் வழியாக வரும் மழை நீரும் ஒன்று சேர்ந்து இவ் வாய்க்கால் வழியாக தண்ணீர் பெருக்கெடுத்து பாய்கிறது.

இதன் கரையோரங்கள், தனியாரால் ஆக்கிரமிக்கப்பட்டு மண் அள்ளப்படுவதால் உடைப்பு ஏற்படுவதாகக் கூறப்படுகிறது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை பெய்த மழையில் பாம்பூரி வாய்க்காலில் உடைப்பு ஏற்பட்டு கருங்கல் ஏலா முழுவதும் தண்ணீர் சூழ்ந்தது.

இதனால் 2 மாதங்களுக்கு முன் நடப்பட்ட 1 லட்சம் வாழைக் கன்றுகள் தண்ணீரில் மூழ்கி சேதமடைந்தன. தகவலின் பேரில் ஞாயிற்றுக்கிழமை மாவட்ட பொதுப்பணித் துறை செயற்பொறியாளர் சுப்பிரமணியன், தக்கலை கோட்ட உதவிப் பொறியாளர் கதிரவன் உள்ளிட்டோர் பாதிக்கப்பட்ட பகுதிகளை நேரில் சென்று ஆய்வு செய்தனர்.

இதுகுறித்து மாவட்ட நீர்ப்பாசன சங்கத் தலைவர் வின்ஸ் ஆன்டோ கூறும்போது: இங்குள்ள பெரும்பாலான விவசாயிகள் நிலத்தை குத்தகைக்கு எடுத்து, கடன் வாங்கி, நகைகளை அடகு வைத்து விவசாயம் செய்கின்றனர். ஆனால் இயற்கைச் சீற்றத்தால் விவசாயிகளுக்கு நஷ்டம் ஏற்பட்டு வருகிறது. எனவே, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசும், மாவட்ட நிர்வாகமும் நிவாரணம் வழங்க வேண்டும் என்றார்.

கப்பியறை பேரூராட்சி 8-ஆவது வார்டு கவுன்சிலர் ரசல் கூறும்போது: செல்லங்கோணம் பகுதியிலிருந்து பாம்பூரி வாய்க்கால் குளச்சல் வரை சுமார் 10 கி.மீ., நீளம் உள்ளது. இதன் கரையில் 20 மீ., நீளத்தில் மண் உள்ளது. இந்நிலம் வருவாய் துறையினரால் தனியாருக்கு தூசு பட்டா கொடுக்கப்பட்டுள்ளது.

இதில் சிலர் மண்ணை வெட்டி எடுப்பதால், வாய்க்கால் கரையின் பலம் குறைந்து மழைக் காலங்களில் உடைப்பு ஏற்படுகிறது. எனவே வருவாய்த்துறையினர் தகுந்த நடவடிக்கை எடுப்பதோடு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்க வேண்டும் என்றார்.

**"மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் பெற விண்ணப்பிக்கலாம்'**

தூத்துக்குடி மாவட்டத்தில் மானிய விலையில் வேளாண் இயந்திரங்கள் பெற விரும்புவோர் விண்ணப்பிக்கலாம் என மாவட்ட ஆட்சியர் தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக்குறிப்பு:தூத்துக்குடி மாவட்டத்தில் வேளாண்மைப் பொறியியல் துறை மூலம் விவசாயிகளுக்கு தேசிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் நடப்பு நிதியாண்டில் வேளாண் இயந்திரங்கள் வாங்குவதற்கு மானியம் வழங்க அரசு உத்தரவிட்டுள்ளது.

அதன்படி, வேளாண் இயந்திரங்கள் 50 சதவீத மானியத்திலும், அதிகபட்சமாக நெல் அறுவடை இயந்திரத்துக்கு ரூ.4 லட்சமும் மானியம் வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின் கீழ் மக்காச்சோள அறுவடை இயந்திரம், பல்வகை பயிர்கள் கதிரடிக்கும் இயந்திரம், களையெடுக்கும் இயந்திரம், விசைத் தெளிப்பான், கைத்தெளிப்பான், நேரடி நெல் விதைப்பு கருவி, தென்னை மரம் ஏறும் கருவி, வைக்கோல் கட்டும் இயந்திரம் உள்ளிட்ட பல்வேறு கருவிகள் வாங்க பொதுப்பிரிவினருக்கு ரூ.51 லட்சத்து 80 ஆயிரமும், இந்து ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின வகுப்பினருக்கு ரூ.31 லட்சத்து 10 ஆயிரமும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு உள்ளது.

எனவே விவசாயிகள் தங்கள் விவசாய நிலத்துக்கான கணினி பட்டா, சிட்டா அடங்கல் மற்றும் குடும்ப அட்டை நகல், இரண்டு பாஸ்போர்ட் அளவு புகைப்படம் ஆகிய ஆவணங்களை சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் கொடுத்து விண்ணப்பங்களை பதிவு செய்து பயன்பெறலாம்.இதுதொடர்பான விபரங்களை பெறுவதற்கும் விண்ணப்பங்களை பதிவு செய்வதற்கும் கோவில்பட்டி, விளாத்திகுளம், புதூர், கயத்தாறு, ஓட்டப்பிடாரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, மகாலட்சுமி நகர், இளையரசனேந்தல் சாலை, கோவில்பட்டி அலுவலகத்தை அணுகலாம்.தூத்துக்குடி, கருங்குளம், ஸ்ரீவைகுண்டம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ஸ்டேட் வங்கி காலனி, ஆறுமுகச்சாமி காலனி அருகில், தூத்துக்குடி என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை அணுகலாம்.

திருச்செந்தூர், உடன்குடி, ஆழ்வார்திருநகரி, சாத்தான்குளம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த விவசாயிகள் உதவி செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, முத்துமாலை அம்மன் கோவில் தெரு, திருச்செந்தூர் என்ற முகவரியில் உள்ள அலுவலகத்தை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள் என்றார் அவர்

**கால்நடைகளுக்கு பரவும் மர்ம நோயை தடுக்க வலியுறுத்தல்**

தூத்துக்குடி அருகே கால்நடைகளுக்கு பரவி  வரும் மர்ம நோயை தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தியுள்ளனர்.இதுகுறித்து காந்திய சேவா மன்ற நிறுவனர் என்.வி.ராஜேந்திரபூபதி மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பிய மனு: தூத்துக்குடி அருகேயுள்ள அல்லிகுளம் ஊராட்சியைச் சேர்ந்த அல்லிகுளம்,  திருவனந்தபுரம், ஆண்டாள் நகர், முருகன் நகர் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த விவசாயிகளுக்கு தமிழக அரசின் 100 சதவீத மானியத் திட்டத்தின் கீழ் கறவை மாடுகள் வழங்கப்பட்டன.

இத்திட்டத்தின்கீழ் 50 பேர் பயனடைந்தனர்.  பயன்பெற்ற விவசாயிகள், ஆந்திர மாநிலத்திலிருந்து 20 நாள்களுக்கு முன் மாடுகளை வாங்கி வந்தனர்.  இப்போது அந்த மாடுகளின் கால்களில் காயம் இருப்பதையும், வாயில் நீர் வடிந்து கொண்டிருப்பதையும் கண்டு விவசாயிகள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ஒரு மாடு மற்றும் 5 கன்றுக்குட்டிகள் இதுவரை இறந்துள்ளன. மற்ற மாடுகளுக்கு இந்த நோய் பரவி வருவதாலும் விவசாயிகள் பெரிதும் கவலை அடைந்துள்ளனர்.

இந்த கொடிய நோய் மற்ற மாடுகளுக்கும், பிற பகுதிகளுக்கும் பரவி விடாமல் தடுக்க மாவட்ட நிர்வாகம் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார் அவர்.

**"கருகிய பயிர்களுக்கு வறட்சி நிவாரணம் வேண்டும்'**

கோவில்பட்டி வட்டத்தில் பருவமழை தவறியதால் கருகிய மானாவாரி பயிர்களுக்கு, உரிய நிவாரணம் வழங்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து தமிழ்நாடு விவசாயிகள் சங்க கோவில்பட்டி வட்டச் செயலர் லெனின்குமார் வெளியிட்டுள்ள அறிக்கை: கோவில்பட்டி வட்டம் முழுவதும் மானாவாரியில் பயிரிட்ட மக்காச்சோளம், கம்பு, சோளம், பருத்தி, உளுந்து, பாசிபயறு உள்ளிட்ட பயிர்கள் பருவமழை தவறிய காரணத்தால் முற்றிலும் கருகிவிட்டன. கடன் வாங்கி விவசாயம் செய்த விவசாயிகள், கடனாளியாக தவிக்கின்றனர். கடந்த ஆண்டு வழங்கப்பட்ட நிவாரணத் தொகை கூட முழுமையாக வழங்கப்பட்டவில்லை. இந்நிலையில் இப்போதும் அதே வறட்சி ஏற்பட்டுள்ளது. எனவே, தமிழக அரசு மாவட்ட நிர்வாகத்தின் மூலம் உடனடியாக பாதிக்கப்பட்ட பயிர்களை கணக்கெடுத்து ஏக்கருக்கு ரூ.15 ஆயிரம் வீதம் நிவாரணம் வழங்கி விவசாயிகளை பாதுகாக்க வேண்டும் என்றார் அவர்.

**சாத்தான்குளத்தில் விவசாயிகள் சங்கக் கூட்டம்**

தமிழ்நாடு விவசாயிகள் சங்க சாத்தான்குளம் கிளைக் கூட்டம் சாத்தான்குளத்தில் நடைபெற்றது.

கூட்டத்துக்கு, மாவட்டத் தலைவர் எஸ்.எம். ராமையா தலைமை வகித்தார். மாவட்டச் செயலர் எஸ். நல்லையா முன்னிலை வகித்தார். பொருளாளர் எம்.பரமசிவம் வரவேற்றார்.

கூட்டத்தில், சாத்தான்குளத்தில் நான்கு நாளுக்கு ஒருமுறை குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. அதை இரண்டு நாள்களுக்கு ஒருமுறை வழங்கிட வேண்டும். விவசாய தொழிலாளர்களுக்கு, உடல் உழைப்பு தொழிலாளர்களுக்கு 60 வயது முதிர்ந்த பெரியோர்களுக்கு, விதவை பெண்களுக்கு உதவித்தொகையாக மாதம் ரூ. 3 ஆயிரம் வழங்கவேண்டும்,

சாத்தான்குளம் பேரூராட்சி கழிவு குப்பைகள் கருமேனி ஆற்றின் கரையோரம் கொட்டப்படுகிறது. இந்த கருமேனி ஆறு வழியாகத் தான் பல குளத்துக்கு தண்ணீர் செல்கிறது. குளங்களை நம்பி பல ஊர் விவசாயிகள் உள்ளனர். ஆதலால் குப்பைகளை அதில் கொட்டுவதை நிறுத்தி தேர்வு செய்யப்பட்ட இடத்தில் கொட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையேல் விவசாயிகள் சங்கம் சார்பில் போராட்டம் நடத்தப்படும் என்பன உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதில், சாத்தான்குளம் கிளைத் தலைவராக ஆ.வேம்பரசு, துணைத் தலைவராக வி.பக்கிரிமுத்து, செயலராக எஸ். சுபாஸ் சந்திரபோஸ், துணைச் செயலராக எம். வெட்டும்பெருமாள், பொருளாளராக எம். முத்தையா ஆகியோர் ஏகமனதாக தேர்வு செய்யப்பட்டனர். சங்க நிர்வாகிகள் ஜெ. சிதம்பரம்மாள், பி. ஆவுடையம்மாள், எம். சுசிலாம்மாள், வி.நட்சத்திரம்மாள், கே. சண்முககனி, ஜெ. பெருமாள், டி.பாக்கியநாதன், பி.ஜே. மாசானமுத்து உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி நகரச் செயலர் பி. ராஜகோபால் நன்றி கூறினார்.

**சொட்டு நீர்ப் பாசனத்தில் நெல் சாகுபடி தீவிரம்**

சொட்டு நீர்ப்  பாசன முறையில் நெல் சாகுபடி செய்யும் புதிய முயற்சியில் காளப்பநாயக்கன்பட்டி விவசாயி ஈடுபட்டுள்ளார். நாற்று விடாமல் நேரடியாக நெல் பயிரை வயலில் விதைத்து, அதில் சொட்டுநீர்ப் பாசனம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

வழக்கமாக கரும்பு, தென்னை, மரவள்ளி, நிலக்கடலை போன்ற பயிர்கள் மட்டுமே சொட்டு நீர்ப் பாசன முறையில் சாகுபடி செய்யப்படுகிறது. அதிகளவில் நீர் தேவைப்படும் நெல் பயிரை சொட்டு நீர்ப் பாசன முறையில் விவசாயிகள் யாரும் சாகுபடி செய்ததில்லை. இந்த நிலையில், புதிய முயற்சியாக ராசிபுரம் வட்டம், காளப்பநாயக்கன்பட்டி பகுதியைச் சேர்ந்த விவசாயி ஒருவர் தனது நிலத்தில் சொட்டு நீர்ப் பாசன முறையில் நெல் சாகுபடி செய்யும் பணியில் தீவிரம் காட்டியுள்ளார். இதன்மூலம், வயலில் நெல் விதைகளை தூவி நாற்று விட்டு நடவு செய்து நீர்ப் பாய்ச்சி நெடு நெல் வளர்த்து, அறுத்து தூற்றும் விவசாயிகளின் வழக்கமான பாரம்பரிய நடவு முறைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து சொட்டு நீர்ப் பாசன முறையில் நெல் நடவு செய்துள்ள விவசாயி கூறியது: நெல் விதைகளை நிலத்தில் தூவி நாற்று விட்டு 20 நாள்கள் வளர்த்து வயலை உழுது தயார் செய்து நடவு செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ.6 ஆயிரம் செலவாகிறது. இதற்குத் தேவையான விவசாய கூலி ஆள்களும் கிடைப்பதில்லை. இதற்கு நேரடி நெல் விதைப்பு முறைதான் சரியானது என திட்டுமிட்டேன். இதன்படி, வயலில் நேரடி நெல் விதைப்பு செய்ய ரூ.2,500 மட்டுமே செலவானது.

கம்பு சோளம் போன்ற தானியங்கள் விதைத்தது போன்ற நெல்லையும் நேரடியாக விதைத்து அறுவடை செய்தேன். இந்த ஆண்டு வேளாண்மை பல்கலைக்கழகம் கொடுத்த நேரடி நெல் விதைப்பு கருவியைப் பயன்படுத்தி வருகிறேன். இதற்கு 6 கிலோ விதைகள் மட்டுமே தேவைப்பட்டது.

பாய்ச்சலும், காய்ச்சலும் என்ற முறையில் சொட்டு நீர்ப் பாசனம் மூலம் நெல் சாகுபடி செய்துள்ளேன். நாற்று விட்டு நடவு செய்வதால் நாற்றங்காலில் இருந்து எடுக்கப்படும் நாற்றுகள் வயலில் மீண்டும் வேர்பிடித்து தழைக்க 10 நாள்கள் கூடுதலாகிறது. சொட்டு நீர்ப் பாசனம் மூலம் வயலில் எப்போதும் ஈரப்பதம் இருந்து கொண்டே இருக்கிறது. கால்வாயில் நீர்ப் வரத்து இல்லாத நேரத்திலும், ஆழ்துளைக் கிணற்று நீரை கொண்டே நெல் சாகுபடி செய்ய முடியும் என்றார் அவர். சொட்டு நீர்ப் பாசன முறையில் நெல் பயிர் சாகுபடி செய்யப்படுவது தொடங்கியுள்ளதால், இனி நஞ்சை நிலங்களில் மட்டுமன்றி புஞ்சை நிலங்களிலும் நெல் நடவு சாத்தியமாகியுள்ளது.

**கரும்புக்கு டன்னுக்கு ரூ.4,000 வழங்க பாஜக வலியுறுத்தல்**

கரும்புக்கு டன்னுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க வேண்டும் என, பாரதிய ஜனதா கட்சி வலியுறுத்தியது.

அக் கட்சியின் சேலம் கோட்ட விவசாய அணி நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் அரூரில் அதன் மாநில துணைத் தலைவர் ஆர்.ஏ.வரதராஜன் தலைமையில் சனிக்கிழமை நடைபெற்றது.

உயர்ந்து வரும் வேளாண் உற்பத்திச் செலவை கணக்கில் கொண்டு கரும்பு டன் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ்நாடு முழுவதும் கோமாரி நோய் பாதிப்பால் ஆயிரக்கணக்கான மாடுகள் உயிரிழந்துள்ளன. உயிரிழந்த மாடுகளுக்குத் தலா ரூ.35 ஆயிரமும், ஆடுகள் உள்ளிட்ட கால்நடைகளுக்கு

ரூ.5 ஆயிரமும் இழப்பீடு வழங்க வேண்டும்.

பால் உற்பத்தியாளர்களின் கொள்முதல் விலையை உயர்த்த வேண்டும். அரசுப் பள்ளிகளில் சத்துணவுடன் பால் பவுடரை வழங்க தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழகத்தில் விவசாயிகள் முக்கியமாக மஞ்சள் பயிர் செய்கின்றனர். ஆனால், மஞ்சளின் கொள்முதல் விலை மிகக் குறைவாக உள்ளது.

எனவே, மஞ்சளுக்கான குறைந்தபட்ச கொள்முதல் விலையை மத்திய, மாநில அரசுகள் நிர்ணயம் செய்ய வேண்டும்.

பாப்பிரெட்டிப்பட்டி வாணியாறு அணையின் இடதுபுறக் கால்வாயை ராமியணஹள்ளி, கோபிசெட்டிப்பாளையம், செட்ரப்பட்டி வழியாக மொரப்பூர் வரையிலும் நீட்டிக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

ஆலோசனைக் கூட்டத்தில், பாஜக விவசாய அணி மாநிலத் தலைவர் மலையம் சம்பத், மாநில பொதுச் செயலர் ஆறுமுகம், கோட்டப் பொறுப்பாளர் பாலகிருஷ்ணன், மாவட்டத் தலைவர் கே.மாணிக்கம், மாவட்ட செயலர்கள் குழந்தை ரவி, எஸ்.ஆர்.அழகு, மாவட்ட பொருளர் வி.அசோகன், மாவட்ட துணைத் தலைவர் கதிரவன், வழக்குரைஞர் மயில்வாணன், மாவட்ட பார்வையாளர் சி.குமரவேல் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**கால்நடைகளுக்கு தடுப்பூசி**

திருப்பத்தூரை அடுத்த ராச்சமங்கலத்தில், கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவுவதை தடுப்பது குறித்த கால்நடை பாதுகாப்பு திட்ட முகாம் சனிக்கிழமை நடைப்பெற்றது.

நிகழ்ச்சியில் ஊராட்சி மன்றத் தலைவர் கே.வீரமணி, ஒன்றியக் கவுன்சிலர் வீரராகவன், துணைத் தலைவர் சிவசக்தி, கூட்டுறவு சங்க இயக்குநர் கார்த்திகேயன் முன்னிலை வகித்தனர். கால்நடை மருத்துவர் சரவணராஜன் தலைமையிலான மருத்துவக் குழுவினரால் 1300 கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பூசி போடப்பட்டது. முடிவில் ஊராட்சி செயலர் சங்கர் நன்றி கூறினார்.

**பட்டு விலை பன்மடங்கு உயர்வு கைத்தறி சங்கத்தினர் கவன ஈர்ப்பு பேரணி நடத்த முடிவு**

பட்டு விலை பன்மடங்கு உயர்வினால் தமிழ்நாடு நெசவாளர்கள் நல்வாழ்வு வளர்ச்சிச் சங்கத்தின் ஒருங்கிணைந்த கூட்டமைப்பு நிர்வாகிகள் கூட்டம் ஆரணி ஜோதிராமலிங்க சுவாமி மடத்தில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்தில் மருசூர் ஜெ.தமிழ்ச்செல்வன் தலைமை தாங்கினார்.

கைத்தறி நெசவாளர்கள் வெங்கடேசன், எம்.சக்திவேல், தச்சூர் பி.வேலு, கே.சீனிவாசன், எல்.கேசவன், ஏ.பார்த்தீபன், எம்.சிவா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக் கூட்டத்தில் தமிழ்நாடு பட்டு கைத்தறி சங்கம், விவேகானந்தா கைத்தறி சங்கம், தாமரை கைத்தறி சங்கம், சுவாமி விவேகானந்தா கைத்தறி சங்கம், காக்கும் கரங்கள் கைத்தறி சங்கம், திருவள்ளுவர் நெசவாளர் கூட்டு குழுமம், கிருபானந்த வாரியார் கைத்தறி சங்கத்தினர்களின் கைத்தறி சங்கங்களின் கூட்டமைப்பு சார்பில் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

இதில் பட்டின் விலை பன்மடங்கு உயர்வால், பாரம்பரியம் கைத்தறி பட்டு நெசவு தொழிலாளர்கள் வேலை இழப்பு காரணமாக மத்திய, மாநில அரசை கவன ஈர்ப்பு செய்ய டிசமபர் 18 அன்று ஆரணி கொசப்பாளையம் மைதானத்திலிருந்து ஆரணி வட்டாட்சியர் அலுவலகம் வரை பேரணி நடத்துவது, மானிய விலையில் பட்டு வழங்குவதை அதிகப்படுத்தித் தர செய்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**கரு மாற்றுத் தொழில்நுட்பத்தில் 5 கன்றுகள் பிறந்தன!**

கரு மாற்றுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, திருவண்ணாமலை மாவட்டத்தில் முதல் முறையாக திடகாத்திரமான 5 கன்றுகளை பிறக்க வைத்து அரசு கால்நடை மருத்துவர்கள் சாதனை படைத்துள்ளனர்.

கால்நடைகளில் இயற்கை கருவூட்டலுக்கு மாற்றாக, செயற்கை கருவூட்டல் முறை பல ஆண்டுகளாக நடைமுறையில் உள்ளது. இப்போது, கரு மாற்றுத்

தொழில்நுட்பம் என்ற அதிநவீன முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் மட்டுமே நடைமுறையில் இருந்த இத்திட்டம், இப்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் செயல்படுத்தப்பட்டு, வெற்றி பெற்றுள்ளது கால்நடை மருத்துவர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது.

2013-ல் திட்டம் அமல்: திருவண்ணாமலை மாவட்ட கால்நடை பராமரிப்புத் துறை, ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்கம், தமிழ்நாடு மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து கரு மாற்றுத் தொழில்நுட்பத்தை 2013 பிப்ரவரியில் அறிமுகப்படுத்தின. இத்திட்டம் மூலம் திடகாத்திரமான பசு ஒன்றுக்கு செயற்கை முறையில் கருவூட்டல் ஊசி போடப்பட்டது.

ஊசி போடப்பட்ட 10-வது நாளில் அப்பசுவின் கருப்பையில் சுமார் 20 கரு முட்டைகள் உருவாகின. இவற்றை கரு மாற்றுத் தொழில்நுட்பம் மூலம் அப் பசுவின் கருப்பையில் இருந்து தனித்தனியே பிரித்து எடுத்து, பாதுகாப்பாகப் பதப்படுத்தப்பட்டன. பின்னர், ஏற்கெனவே கரு முட்டையைச் செலுத்தத் தேர்வு செய்யப்பட்டிருந்த திடகாத்திரமான 20 பசுக்களின் கருப்பையில் இந்த கருமுட்டைகள் வைக்கப்பட்டன.

5 கன்றுகளை ஈன்ற பசுக்கள்: கரு முட்டைகள் வைக்கப்பட்ட 20 பசுக்களும் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வந்தன. இருப்பினும், இவற்றில் 5 பசுக்களின் கருப்பையில் வைக்கப்பட்ட கரு முட்டைகள் நல்ல முறையில் வளர்ந்து, சில தினங்களுக்கு முன்பு கன்றுகளை ஈன்றுள்ளன.

சோமாசிபாடி கால்நடை மருந்தகத்துக்கு உள்பட்ட சோமாசிபாடி காந்தி நகரில் ஒரு காளைக் கன்றையும், சோ.பள்ளம் கிராமத்தில் ஒரு காளைக் கன்றையும் பசுக்கள் ஈன்றன. இதுதவிர, கொளக்குடி கால்நடை மருந்தகத்துக்கு உள்பட்ட ஏந்தல் கிராமத்தில் ஒரு கிடேரி கன்றையும், கீழ்நாத்தூர் கிராமத்தில் ஒரு கிடேரி, ஒரு காளைக் கன்றுகளையும் பசுக்கள் ஈன்றுள்ளன.

கால்நடை மருத்துவர்கள் மகிழ்ச்சி: மாவட்டத்தில் முதல் முறையாக கரு மாற்று தொழில்நுட்பத்தில் 5 கன்றுகள் பிறந்துள்ளதும், இவை அனைத்தும் நல்ல முறையில் இருப்பதும் கால்நடை மருத்துவர்களிடையே மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது. இதுகுறித்து, சோமாசிபாடி கால்நடை உதவி மருத்துவர் ஆர்.திருப்பதி

கூறுகையில், சென்னை கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் ஸ்ரீதேவி, சரத், ரங்கசாமி, கால்நடை உதவி மருத்துவர்கள் நவநீதகிருஷ்ணன், சரவணன், ஆனந்தன், ஆவின் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு சங்க மருத்துவர்கள் கணேசன், சபினா ஆகியோர் அடங்கிய குழு இப்புதிய முயற்சியில் ஈடுபட்டது.

சோமாசிபாடி கால்நடை மருந்தகத்துக்கு உள்பட்ட கிராமங்களில் 12 பசுக்களின் வயிற்றில் கரு முட்டைகள் வைக்கப்பட்டன. இவற்றில் 2 பசுக்கள், இப்போது கன்றுகளை ஈன்றுள்ளது எங்களுக்கு பெரும் மகிழ்ச்சியை அளிக்கிறது.

ஆராய்ச்சிக்கு அளிக்கப்படும்: புதிய தொழில்நுட்பத்தில் பிறந்துள்ள 5 கன்றுகளில் 3 காளைக் கன்றுகள் மட்டும் விவசாயிகளிடம் இருந்து தலா ரூ.5 ஆயிரம் விலை கொடுத்து வாங்கப்படும். இந்த காளைக் கன்றுகள், திருவண்ணாமலை மாவட்ட கால்நடைத் துறை மண்டல இணை இயக்குநர் டி.பி.ராஜேந்திரன் அறிவுறுத்தலின்படி, தஞ்சாவூர் மாவட்டம், ஈச்சங்கோட்டையில் உள்ள தமிழ்நாடு அரசு மாவட்ட கால்நடைப் பண்ணைக்கு ஆராய்ச்சிக்காக அனுப்பி வைக்கப்படும் என்றார்.

**"விவசாயிகள் பிரச்னைக்காக போராட முன்வர வேண்டும்**

விவசாயிகள் பிரச்னைக்காக குரல் கொடுக்கவும், போராடவும் அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும் என்று கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுச்செயலாளர் ஈஸ்வரன் வலியுறுத்தினார்.

கொங்குநாடு மக்கள் தேசிய கட்சியின் பொதுக்கூட்டம், பொள்ளாச்சியில் சனிக்கிழமை நடைபெற்றது .

கோவை மாவட்ட செயலாளர் நித்தியானந்தன் தலைமை வகித்தார். மாநில அவைத்தலைவர் சென்னியப்பன் முன்னிலை வகித்தார். பொள்ளாச்சி நகர செயலாளர் ஈஸ்வர நாச்சிமுத்து வரவேற்றார்.

கூட்டத்தில் கட்சியின் பொதுச்செயலாளர் ஈஸ்வரன் பேசியது: பல்வேறு காரணங்களால் தற்போது விவசாயம் செய்ய முடியாத நிலை உள்ளது. எனவே விவசாயிகளுக்கு அரசு உதவ வேண்டும். கள் இறக்க அனுமதித்தால் தென்னை

விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில் இருக்கும். ஆகவே கள் இறக்க அனுமதிக்க வேண்டும்.

கரும்பு டன்னுக்கு ரூ.3,500 வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும். டீசல், பெட்ரோல் உபயோகத்துக்கு பதிலாக எத்தனாலை பயன்படுத்தினால் கரும்பு விவசாயம் வலுப்பெறும்.

ஆனைமலையாறு - நல்லாறு திட்டத்தை நிறைவேற்ற கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி நடைப்பயணம் சென்றது. பல்வேறு பிரச்னைகளுக்கு முன்வந்து போராடும் அரசியல் கட்சிகள் இந்த பிரச்னையில் மெத்தனம் காட்டுகின்றன. எனவே விவசாயிகள் பிரச்னைக்காக குரல் கொடுக்கவும், போராடவும் அனைத்துக் கட்சிகளும் முன்வர வேண்டும்.

கோவை - பொள்ளாச்சி சாலையை நான்குவழி சாலையாக மாற்றவேண்டும்.

தமிழகத்தில் மின் பற்றாக்குறையை போக்க தனியாரிடம் இருந்தோ அண்டை மாநிலங்களில் இருந்தோ 3000 மெகாவாட் மின்சாரம் வாங்கவேண்டும்.

தென்னை நார் பயன்பாட்டு பொருள்கள் தயாரிக்கும் தொழிற்சாலையை பொள்ளாச்சியில் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

ஏற்காடு இடைத்தேர்தலில் வாக்கு சேகரிக்க, இரண்டு பிரதான கட்சிகளும் வாக்காளர்களுக்கு பணம் கொடுத்துவருகின்றன. அதைப் பறிமுதல் செய்யாமல், பொதுமக்களின் பணத்தை தேர்தல் ஆணையத்தினரும், போலீஸாரும் பறிமுதல் செய்கின்றனர்.

வரும் மக்களவைத் தேர்தலில் கூட்டணி அமைப்பது பற்றி 2014 ஜனவரி மாதம் பொதுக்குழு கூட்டி முடிவு எடுக்கப்படும் என்றார்.

**பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

கேரள வனப்பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்புப் பகுதியில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருவதால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 5,600 கனஅடியாக அதிகரித்துள்ளது.

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய நீராதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. இதன் நீர்மட்டக் கொள்ளளவு 120 அடி. இதில் 15 அடி சேறும் சகதியுமாக உள்ளது. அணை மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

கடந்த சில மாதங்களாக மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்யாததால் அணைக்கு நீர்வரத்து நாள்தோறும் சராசரியாக 2,000 கனஅடிக்கு குறைவாக இருந்தது. இதனால், நீர்வரத்துக்கு ஏற்ப, அணையில் இருந்து பவானி ஆறு மற்றும் கால்வாய்க்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பெய்து வருவதாலும், மின்உற்பத்திக்காக பில்லூர் அணையில் தண்ணீர் திறந்து விடப்படுவதாலும், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 67 அடியாகவும் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 5,600 கனஅடியாகவும் உள்ளது. அணையில் இருந்து

விநாடிக்கு, ஆற்றில் 400 கனஅடியும் கால்வாயில் 1900

கனஅடி நீரும் திறந்துவிடப்படுகிறது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி, தெங்குமரஹாடா மற்றும் பவானிசாகர் பகுதியில் விட்டு விட்டு மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் கணிசமாக

உயர வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

**நாட்டுக் கோழிகளை முறையாகப் பராமரிக்க ஆலோசனை**

வீடுகளில் வளர்க்கப்படும் நாட்டுக் கோழிகளை நோய்த் தாக்குதல்களிலிருந்து காப்பாற்ற அவற்றை முறையாகப் பராமரிக்க வேண்டுமென கால்நடை பராமரிப்புத் துறை தெரிவித்துள்ளது.

இது குறித்து கால்நடை பராமரிப்புத் துறை அதிகாரிகள் தெரிவித்திருப்பதாவது:

கிராமப் புறங்களில் சொந்தத் தேவைகளுக்காகவும், விற்பனைக்காகவும் நாட்டுக் கோழிகள் பண்ணைகளற்ற சாதாரண முறையில் வீடுகளில் வளர்க்கப்பட்டு வருகின்றன. இவற்றிலிருந்து கிடைக்கும் முட்டைகளிலிருந்து குஞ்சுகள் பொரித்து இனப் பெருக்கம் செய்யப்படுகின்றன.

தற்போது மழைக் கால நோய்கள் கால்நடைகளைத் தாக்கி இறப்பை ஏற்படுத்தி வரும் நிலையில், முறையாகப் பராமரித்தால் நாட்டுக் கோழிகளின் இழப்பைத் தவிர்க்கலாம்

கோழிகளில் ரத்தக் கழிச்சல், இராணிக்கட் நோய், பறவைக் காய்ச்சல் முக்கிய நோய்களாகும். ரத்தக் கழிச்சல் நோய் எட்டு வகைக் கிருமிகளால் உண்டாகிறது. தீவனம், குடிநீர் மூலமாக உள்சென்று குடல் திசுக்களைப் பாதித்து உயிரிழப்பை ஏற்படுத்தும். மலத்தில் மாறுபாடு காணப்படுவது முக்கிய அறிகுறியாகும். நல்ல காற்றோட்டமான, ஈரமற்ற இடங்களில் கோழிகளை தங்க வைக்க வேண்டும்.

இராணிக்கட் நோய் கோடை கால நோயாக இருந்தாலும் அனைத்துப் பருவத்திலும் பாதிப்புகளை உண்டாக்கும். நோயால் பாதிக்கப்பட்ட கோழிகளின் மூக்கு, வாயிலிருந்து கசியும் ஒரு வகை திரவத்தின் மூலம் வேகமாகப் பரவக் கூடியது. அதிதீவிர நிலையில் 90 சதவீதம் வரை இறப்பு நேரிடலாம். தலை, கால்கள் திருகிக் கொண்டும், மூச்சுத்திணறல், இருமல் இருப்பதும் அறிகுறியாகும்.

பறவைக் காய்ச்சல் பிற நாடோடிப் பறவைகள் மூலமாக எளிதில் பரவக் கூடியது. காய்ச்சல், நாசித் துவாரங்களில் ரத்தக் கசிவு, தள்ளாட்டம் முக்கிய அறிகுறிகளாகும்.

எனவே, நோய்கள், பாதிப்புகள் பற்றிய சந்தேகம் எழுந்தால், தகுந்த கால்நடை மருத்துவரை அணுகி சிசிச்சை பெற்றால் இழப்புகளைக் குறைக்கலாம்.

**கோமாரி நோய்க்கு இழப்பீட்டுத் தொகை:பா.ஜ.க. கோரிக்கை**

கோமாரி நோயினால், கால்நடைகள் இழப்பு ஏற்பட்டவர்களுக்கு அரசு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும் என பா.ஜ.க. கோரிக்கை விடுத்துள்ளது.

பா.ஜ.க. ஒன்றியச் செயற்குழுக் கூட்டம் அவிநாசியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. கூட்டத்திற்கு, பாஜக ஒன்றியத் தலைவர் ஏ.கே.சண்முகம் தலைமை வகித்தார். ஒன்றிய பொதுச்செயலாளர் கணேசன், மாவட்ட விவசாய அணி பொறுப்பாளர் ஏ.எம்.ஆறுமுகம், மாவட்டச் செயற்குழு உறுப்பினர் கருணாமூர்த்தி, தொகுதி பொறுப்பாளர் ராதாகிருஷ்ணன், ஒன்றியச் செயலாளர் ஸ்ரீதர் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மாநிலச் செயற்குழு உறுப்பினர் சின்னசாமி, மாவட்ட அமைப்பு துணைத் தலைவர் ஏ.ஆர்.ராஜகோபால், மாநில பொதுக்குழு உறுப்பினர் சந்திரன் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

கூட்டத்தில், தொடர் மின் வெட்டு பிரச்சனைக்கு உடனடியாக அரசு தீர்வு காண வேண்டும், அவிநாசியில் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டும், கோமாரி நோயினால் கால்நடைகள் இழப்பு ஏற்பட்டவர்களுக்கு அரசு இழப்பீட்டுத் தொகை வழங்க வேண்டும். ஆதார் அட்டையில் விடுபட்டவர்கள் பெயரை உரிய முறையில் சோ0த்து அட்டை வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

**பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**

கேரள வனப்பகுதி மற்றும் மேற்குத் தொடர்ச்சி மலை நீர்ப்பிடிப்புப் பகுதியில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருவதால், பவானிசாகர் அணைக்கு நீர்வரத்து 5,600 கனஅடியாக அதிகரித்துள்ளது.

ஈரோடு மாவட்ட மக்களின் முக்கிய நீராதாரமாக உள்ளது பவானிசாகர் அணை. இதன் நீர்மட்டக் கொள்ளளவு 120 அடி. இதில் 15 அடி சேறும் சகதியுமாக உள்ளது. அணை மூலம் 2 லட்சத்து 7 ஆயிரம் ஏக்கர் விளைநிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

கடந்த சில மாதங்களாக மேற்குத் தொடர்ச்சி மலையின் நீர்ப்பிடிப்புப் பகுதியில் மழை பெய்யாததால் அணைக்கு நீர்வரத்து நாள்தோறும் சராசரியாக 2,000 கனஅடிக்கு குறைவாக இருந்தது. இதனால், நீர்வரத்துக்கு ஏற்ப, அணையில் இருந்து பவானி ஆறு மற்றும் கால்வாய்க்கு தண்ணீர் திறந்துவிடப்பட்டது.

இந்நிலையில், கடந்த சில நாள்களாக மேற்குத் தொடர்ச்சி மலையில் மழை பெய்து வருவதாலும், மின்உற்பத்திக்காக பில்லூர் அணையில் தண்ணீர் திறந்து விடப்படுவதாலும், அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி, அணையின் நீர்மட்டம் 67 அடியாகவும் அணைக்கு நீர்வரத்து விநாடிக்கு 5,600 கனஅடியாகவும் உள்ளது. அணையில் இருந்து

விநாடிக்கு, ஆற்றில் 400 கனஅடியும் கால்வாயில் 1900

கனஅடி நீரும் திறந்துவிடப்படுகிறது.

மேற்கு தொடர்ச்சி மலைப்பகுதி, தெங்குமரஹாடா மற்றும் பவானிசாகர் பகுதியில் விட்டு விட்டு மழை பெய்து வருவதால், அணையின் நீர்மட்டம் கணிசமாக

உயர வாய்ப்புள்ளதாக பொதுப்பணித் துறையினர் தெரிவித்தனர்.

**காகித பொருள்கள் தயாரிக்க இலவச பயிற்சி**

காகிதத்தில் பொருள்கள் தயாரிப்பது தொடர்பான பயிற்சி வகுப்புகள் நவ.27 முதல் டிச.7 ஆம் தேதி வரை நடைபெற உள்ளது.

திண்டுக்கல் கனரா வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மையத்தின் மூலம் இந்த பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன. குறைந்த பட்சமாக 8 ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற, 18 முதல் 45 வயதிற்குள்பட்டவர்கள் இந்த முகாமில் பங்கேற்கலாம். காகிதத்தை மூலப் பொருளாக பயன்படுத்தி கப், பேக், கவர் உள்ளிட்ட பொருள்கள் தயாரிப்பதற்கு பயிற்சி வழங்கப்படுகிறது. இலவசமாக நடைபெறும் இந்த முகாமில், பயிற்சி காலத்தில் உணவும் இலவசமாக வழங்கப்படுகிறது.

பங்கேற்க விருப்பமுள்ளவர்கள், குடும்ப அட்டை, கல்விச்சான்றிதழ், மார்பளவு புகைப்படம் 2 ஆகியவற்றுடன் கனரா வங்கியின் ஊரக சுய வேலைவாய்ப்பு பயிற்சி மைய இயக்குநர் ஆர்.அர்ஜூன் முத்தையாவை தொடர்பு கொள்ள

வேண்டும். இதுகுறித்து கூடுதல் விவரங்களுக்கு 9865829434 என்ற எண்ணில் தொடர்பு கொள்ளலாம்.

**பருவமழை பொய்த்ததால் பயிர் காப்பீட்டு பிரீமியத் தொகையை அரசு செலுத்த கோரிக்கை**

சிவகங்கை மாவட்டத்தில் நடப்பாண்டில் வடகிழக்கு பருவமழை பொய்த்து விட்டதால் விவசாயிகள் செலுத்த வேண்டிய பயிர் காப்பீட்டு பிரீமியத் தொகையை தமிழக அரசே செலுத்தி விவசாயிகளைப் பாதுகாக்க வேண்டும் என சிவப்பு நட்சத்திர மக்கள் இயக்கத்தின் மாவட்ட விவசாய அணி கோரிக்கை விடுத்துள்ளது.

மாவட்டத்தில் ஆண்டுதோறும் தென்மேற்கு பருவமழையால் ஓரளவு பலன் கிடைக்கும். வடகிழக்கு பருவமழையால் தான் பெரும்பாலும் பலன் கிடைக்கும். கடந்த ஆண்டு பருவமழை பொய்த்துப் போனதால், கண்மாய்களில் தண்ணீர் இன்றி பயிர் சாகுபடி கடுமையாக பாதித்து விவசாயிகள் விளைச்சலின்றி பெரிதும் நஷ்டமடைந்தனர். தமிழக அரசு வறட்சி மாவட்டமாக அறிவித்து நிவாரணத் தொகையை வழங்கியது.

தற்போது நவம்பர் 12 இல் துவங்கிய வடகிழக்கு பருவமழையை மட்டும் பெரிதும் நம்பி உழவு செய்து நெல்விதைப்பு பணியை தீவிரமாக விவசாயிகள் தொடங்கி உள்ளனர். தொடர்ந்து நல்ல மழை பெய்யும் என நம்பிக்கையுடன் உள்ளனர்.

சிவகங்கை மாவட்டத்தில், திருப்புவனம், மானாமதுரை, இளையான்குடி வட்டங்களில் சுமார் 40 ஆயிரம் ஏக்கர் வைகை பாசனத்தில் உள்ளது. மாவட்டத்தின் இதர பகுதிகளில் சுமார் 1.75 லட்சம் ஏக்கரில் மானாவாரி நெல் சாகுபடி செய்யப்படுகிறது. பருவமழையின்றி வைகை அணை நிரம்பவில்லை. மாவட்டத்தில் உள்ள சுமார் 5 ஆயிரம் கண்மாய்களும், ஏரிகள், குளங்கள் தண்ணீரின்றி உள்ளது. நிலத்தடி நீர் மட்டம் வெகுவாக குறைந்து விட்டது. பல கிணறுகள் வறண்டு விட்டன. இதனால் கிணறுகள், போர்வெல் கிணறுகளில் இயங்கும் பம்ப்செட்டை நம்பி விவசாயம் நடைபெற்று வருவதும் பாதிக்கப்பட்டுள்ளது.

கரும்பு, வாழை, தென்னை உள்ளிட்ட காய்கறி பயிர்களும் முழுவிளைச்சல் பலனை அடை முடியாமல் விவசாயிகள் தவிக்கின்றனர். மானாவாரியில் சாகுபடியாகும்

மிளகாய், பருத்தி, எண்ணெய் வித்துக்கள், பயறு வகை பயிர்களும் முழுமையான பலன் தருமா என விவசாயிகள் சந்தேகத்துடன் உள்ளனர்.

மாவட்ட வருவாய் குரூப் அளவில் சாகுபடி நிலவரங்களை வருவாய் கிராம கணக்கில் பதிவு செய்யும் பணிகளை மாவட்ட வருவாய் துறை நிர்வாகம் மேற்கொண்டு வருகிறது. இந்நிலையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வறட்சி காரணமாக காவிரி டெல்டா பாசன விவசாயிகளின் பயிர் சாகுபடி முழுவதையும் அரசே பயிர்காப்பீடு செய்தது. தமிழக அரசு சார்பில் ரூ.50 கோடி பிரீமியம் செலுத்தி உள்ளது. இதேபோல் சிவகங்கை மாவட்டத்தில் நடப்பு சம்பா பருவத்தில் நெல் சாகுபடி, இதர உணவு பயிர்கள் சாகுபடியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளின் சிரமத்தைப் போக்க மேம்பட்ட பயிர் காப்பீட்டுத் திட்டத்தில் சேர்க்க விவசாயிகள் கட்ட வேண்டிய பிரீமியத் தொகையை தமிழக அரசு செலுத்த வேண்டும் என சிவப்பு நட்சத்திர இயக்க விவசாய அணித் தலைவர் எல்.ஆதிமூலம் அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளார்.

**சிவகாசியில் 87.2 மி.மீ. மழை**

சிவகாசியில் சனிக்கிழமை இரவு 87.2 மி.மீ. மழை பெய்துள்ளது. அதே நாள் ராஜபாளையத்தில் 140மி.மீ., ஸ்ரீவில்லிபுத்தூரில் 60 மி.மீ., வெம்பக்கோட்டை அணைப் பகுதியில் 19.6.மி.மீ., பிளவக்கல் அணைப் பகுதியில் 50 மி.மீ., கோவிலாறு அணைப்பகுதியில் 63 மி.மீ., வத்திராயிருப்பில் 155 மி.மீ. மழையும் பெய்துள்ளது.

**பயிர் காப்பீடு தொகை வழங்கக் கோரிக்கை**

தேவகோட்டை அருகே சிறுவெத்தி குரூப்பிலுள்ள 14 கிராம விவசாயிகளுக்கு பயிர் காப்பீடு திட்டத்தில் இழப்பீடு வழங்கக் கோரி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

சிவகங்கை மாவட்டம் தேவகோட்டை தாலுகா சிறுவெத்தி குருப்பில் பெருவெத்தி, இளங்குடி, குமானி, பொன்னத்தி, சித்தூர், வெள்ளூர் உள்பட 14 கிராமங்களில் கடந்த சம்பா பருவத்தில் சுமார் 500 ஏக்கரில் விவசாயிகள் நேரடி நெல் விதைப்பில் ஈடுபட்டனர். இப்பகுதி விவசாயிகள் கடந்த ஆண்டு தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கியில் தேசிய வேளாண் பயிர் காப்பீடு திட்டத்தில் காப்பீடு செய்துள்ளனர்.

கடந்த ஆண்டு பருவ மழை பொய்த்து விட்டதால் பயிர்கள் அனைத்தும் கருகிவிட்டன. வருவாய்த் துறையினர் சாகுபடி கணக்கிலும் விலைச்சல் இல்லை என தெளிவாக குறிப்பிட்ட நிலையில், தமிழக அரசால் இழப்பீடு தொகையும் வழங்கபட்டுவிட்டது. இந்நிலையில் இந்த சிறுவெத்தி குருப் கிராமங்களுக்கு மட்டும் பயிர் காப்பீடு இழப்பீடு தொகை கிடையாது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதிகாரிகள் மெத்தன போக்கில் இந்த பகுதியை விடுதல் ஆக்கியிருக்கலாம். எனவே பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு இழப்பீடு தொகை வழங்க வேண்டும் என தேவகோட்டை கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சியருக்கு மனு கொடுத்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.

**கோமாரி நோய் தாக்கி 5 பசு சாவு**

காஞ்சிபுரம் அருகே புல்லலூர் கிராமத்தில் 5 பசுக்கள் மற்றும் 2 கன்றுக்குட்டிகள் கோமாரி நோய் தாக்கி இறந்தன.

காஞ்சிபுரம் அருகே வாலாஜாபாத் கிராம ஊராட்சிக்குள்பட்டது புல்லலூர் கிராமம்.

இக்கிராமத்தைச் சேர்ந்த கஜினி (எ) சண்முகம், அழகேசன் ஆகியோர்களது தலா 1 பசு மாடுகள் வெள்ளிக்கிழமை இரவு இறந்தது.

இந்நிலையில் அதே ஊரைச் சேர்ந்த தசரதனின் 2 பசுக்கள், ஐயப்பனின் 1 பசு, சரத் மற்றும் தீனன் ஆகியோரின் தலா 1 கன்றுக்குட்டிகள் ஆகியன சனிக்கிழமை இரவு இறந்தது.

இந்த பசுக்கள் கடந்த சில தினங்களாகவே கால் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு, நடக்க சிரமப்பட்டனவாம்.

மேலும் வாயில் இருந்து நுரை தள்ளியபடி இருந்ததாம். இதற்கிடையில் இம்மாடுகள் இறந்துள்ளன.

இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை உதவி இயக்குநர் ஆன்டேனி கூறியது:

கோமாரி நோய் தாக்கி பசுக்கள் இறந்த சம்பவம் குறித்து இதுவரை தகவல் ஏதும் வரவில்லை.

கோமாரி நோய் ஏற்படாமல் தடுக்கும் முறைகள் குறித்தும், நோய் தாக்கிய மாடுகளை பராமரிக்க வேண்டிய நடைமுறைகள் குறித்தும் அனைத்து கிராமங்களிலும் மக்களிடம் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

கோமாரி நோய் குறித்த அறிகுறிகளுடன் கால்நடைகள் இறந்தால், அது குறித்த தகவலை கால்நடைத் துறை அதிகாரிகளை தொடர்பு கொண்டு தெரிவிக்க வேண்டும்.

மேலும் கிராம நிர்வாக அலுவலரின் கவனத்துக்கு கொண்டு செல்ல வேண்டும் என்று மீண்டும், மீண்டும் வலியுறுத்தி வருகிறோம்.

ஆனால் பாதிக்கப்பட்டவர்களாக கூறப்படுபவர்கள் இதுவரை யாரிடமும் புகார் தெரிவிக்காதது ஏன்? இருந்தபோதும், திங்கள்கிழமை புல்லலூர் கிராமத்தில், கால்நடை மருத்துவர்கள் அடங்கிய குழு ஆய்வு செய்யும் என்றார்.

**செய்யூரில் 35 மி.மீ. மழை**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி செய்யூரில் 35 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.

காஞ்சிபுரம் மாவட்டத்தில், சனிக்கிழமை மாலை 3 மணிக்கு மேல் பரவலாக மழை பெய்தது. இதனால் காஞ்சிபுரம் உள்ளிட்ட மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் சாலைகளில் தேங்கியது. சனிக்கிழமை இரவு மற்றும் ஞாயிற்றுக்கிழமை அதிகாலையிலும் ஆங்காங்கே மழை பெய்தது. ஞாயிற்றுக்கிழமை மாவட்டம்

முழுவதும் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. ஒரு சில இடங்களில் தூரல் விழுந்தது. ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி நிலவரப்படி மாவட்டத்தின் அதிகபட்சமாக செய்யூரில் 35 மி.மீ. மழை பதிவானது.மாவட்டத்தில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): திருக்கழுகுன்றம் 31.4, மாமல்லபுரம் 17.8, செய்யூர் 16, உத்தரமேரூர் 6, காஞ்சிபுரம், ஆலந்தூர் 4, தாம்பரம் 3.6.

**அதிக வரத்தால் காய்கறி விலை குறைவு**

அதிக வரத்து காரணமாக திருவள்ளூர் சந்தையில் வெங்காயம், தக்காளி உள்ளிட்ட காய்கறிகளின் விலை குறைந்துள்ளது.

இதனால் கார்த்திகை மாதத்தில் ஐயப்ப சுவாமிக்கு விரதம் மேற்கொள்ளும் பக்தர்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கடந்த சில வாரங்கள் வரை வெங்காயம், தக்காளி மற்றும் காய்கறி வகைகளின் விலை அதிகளவில் இருந்தது. இதில் வெங்காயம் கிலோ ரூ.100 வரை விற்கப்பட்டது. அதேபோல், தக்காளி ஒரு கிலோ ரூ.60 முதல் 80 வரை விற்கப்பட்டது.

இதனால் மாத ஊதியம் பெறும் நடுத்தர குடும்பத்தினர் கடுமையாக பாதிக்கப்பட்டனர்.

மேலும் ஹோட்டல்கள், டிபன் கடைகளிலும் காய்கறி விலை உயர்வு கடுமையான தாக்கத்தை ஏற்படுத்தியது.

இந்நிலையில் கார்த்திகை மாதத்தையொட்டி ஐயப்ப சுவாமிக்கு மாலை அணிந்து விரதம் மேற்கொள்ளும் ஐயப்ப பக்தர்கள் அசைவ உணவை விடுத்து, 40 நாள்களுக்கு சைவ உணவை மட்டுமே உட்கொள்வார்கள். அவர்களும் காய்கறி விலை உயர்வால் கடும் அதிருப்தியில் இருந்தனர்.

இந்நிலையில் தற்போது திருவள்ளூர் மார்க்கெட்டில் காய்கறி விலை வெகுவாக குறைந்துள்ளது.

இது குறித்து காய்கறி வியாபாரி ஒருவர் கூறியது: கடந்த சில வாரங்கள் வரை வெங்காயம், தக்காளி, பீன்ஸ், அவரை, பெங்களூர் கத்திரி, இஞ்சி ஆகிய காய்கறி

வகைகளின் வரத்து குறைந்திருந்தது. இதனால் அதிக விலைக்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன.

ஞாயிற்றுக்கிழமை நிலவரப்படி காய்கறிகள் சில்லரை விற்பனை விலை (கிலோவில்) பழைய விலை அடைப்புக்குறிக்குள்: சிறிய வெங்காயம் ரூ.40 (60), பெரிய வெங்காயம் ரூ.50 (90), தக்காளி ரூ.40 (60), கத்தரிக்காய் ரூ. 15 (20), முள்ளங்கி ரூ.10 (20), பீட்ரூட் ரூ.15, (25), உருளை ரூ.35 (50), கருணை ரூ.20 (30), கோஸ் ரூ.20 (35), கேரட் ரூ.40 (50), அவரை ரூ.25 (40), பீன்ஸ் ரூ.20 (40), வெங்களூர் கத்திரி ரூ.15 (25), சேனைக்கிழங்கு ரூ.30 (45), இஞ்சி ரூ.70 (100), காலிபிளவர் (ஒன்று) ரூ.15 முதல் ரூ. 40 வரையில். கீரை வகைகள் ரூ. 10 முதல் 15 வரையிலும் விற்பனை செய்யப்படுகின்றன.

**சம்பா பயிருக்கு காப்பீடு செய்ய டிச.15 -க்குள் பதிவு செய்யலாம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள் மூலம் நடப்பு சம்பா பயிருக்கு கடன் பெறாத விவசாயிகள் டிசம்பர்-15 -ம் தேதிக்குள் பயிர் காப்பீடு செய்ய வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது. இது குறித்து கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைபதிவாளர் கே.வி.எஸ். குமார் வெளியிட்ட தகவல்:

தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களில் பெறும் விவசாயிகளுக்கு கட்டாயத்தின் பேரிலும் பயிர்கடன் பெறாத விவசாயிகளுக்கு விருப்பத்தின் பேரிலும் பயிர் காப்பீடு செய்யப்பட்டு வருகிறது. இது தொடர்பான சுற்றறிக்கைகள் ,படிவங்கள், ஆகியவை அனைத்து தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கங்களுக்கு ஏற்கனவே அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

நடப்பாண்டுக்கு சம்பா நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கான சாதாரண காப்பீடு தொகையாக 12,944 ரூபாய் நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடன் பெறாத சிறு குறு விவசாயிகள் சம்பா நெற்பயிருக்கு ஒரு ஏக்கருக்கு மானியம் நீங்கலாக ரூ117 பிரிமீயம் கடன் பெறாத இதர விவசாயிகள் ஓரு ஏக்கருக்கு ரூ 130 பிரிமீயம் செலுத்த வேண்டும். விவசாயிகள் நெற்பயிருக்கு கூடுதல் காப்பீடு செய்யலாம்.

கூடுதல் காப்பீடாக ஏக்கர் ஒன்றுக்கு ரூ 11,328 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

கூடுதல் காப்பீடு பிரிமீயமாக சிறு குறு விவசாயிகள் ஏக்கருக்கு ஒன்றுக்கு ரூ 816 ம், இதர விவசாயிகளுக்கு ஒரு ஏக்கருக்கு ரூ 907 -ம் செலுத்தி கூடுதல் காப்பீடு செய்யலாம். எனவே புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் பயிர்காப்பீட செய்ய கடைசி நேரம் வரை காத்திராமல் தாங்கள் பயிர் செய்ததற்கான ஏதேனும் ஒரு ஆதாரத்துடன் (கிராம நிர்வாக அலுவலர் அல்லது வேளாண் அலுவலர் சான்று தங்களுக்கு தொடர்புடைய தொடக்க வேளாண் கூட்டுறவு சங்கத்தில் வரும் 15.12.2013 -ம் தேதிக்குள் பயிர்காப்பீடு செய்து கொள்ளலாம்.

**சென்னையில் கன மழை**

வங்க கடலில் உருவாகியுள்ள லெஹர் புயல் சின்னம் காரணமாக சென்னையில் பலத்த மழை பெய்தது. பெரம்பூர், தேனாம்பேட்டை, அயன்புரம், அண்ணாநகர், அம்பத்தூர், புரசைவாக்கம், உள்ளிட்ட பகுதியிலும் சென்னையின் பிறபகுதிகளிலும் அதிகாலையில் இருந்து மழை பெய்து வருகிறது.

**கரும்புக் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி வேலைநிறுத்தம்**


மகாராஷ்டிர மாநிலம் கோலாப்பூர் மற்றும் சாங்லி மாவட்டத்தில் கரும்புக் கொள்முதல் விலையை உயர்த்தக்கோரி ஞாயிற்றுக்கிழமை வேலைநிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

ஸ்வாபிமானி ஷேத்காரி சங்கடனா (எஸ்எஸ்எஸ்) அமைப்பினர் இந்த வேலைநிறுத்தப் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தனர். போராட்டக்காரர்கள் சாலையை மறித்து, டயர்களைக் கொளுத்தி, பேருந்துகள் மீது கல்வீசித் தாக்கினர். இதில் 6 அரசுப் பேருந்துகள் சேதமடைந்தன. ஒரு பேருந்து ஓட்டுனரும், நடத்துனரும் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை யாரும் கைது செய்யப்படவில்லை.

மகாராஷ்டிர மாநிலத்தின் பிற பகுதிகளில் கரும்பு அரைவைப் பணி தொடங்கி விட்ட நிலையில், இந்தப் போராட்டம் காரணமாக கோலாப்பூர் மற்றும் சாங்லி

மாவட்ட கரும்பு அரைவை தொழிற்சாலைகளில் இன்னும் அரைவைப் பணி தொடங்கப்படவில்லை.

**ஆந்திரத்தை நோக்கி புதிய புயல் "லெஹர்'**



வங்கக் கடலில் புதிதாக உருவாகியுள்ள "லெஹர்' புயல் வரும் 28-ஆம் தேதி ஆந்திர மாநிலத்தில் கரையை கடக்கும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதனால் தமிழகத்திலும் குறிப்பாக கடலோர பகுதிகளில் கன மழை பெய்ய வாய்ப்புள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் ஞாயிற்றுக்கிழமை கூறியது: வங்கக்கடலில் தெற்கு அந்தமான் பகுதியில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை கடந்த சில நாள்களுக்கு முன்பு உருவானது. இது இப்போது புயலாக வலுப்பெற்றுள்ளது. இதற்கு லெஹர் புயல் என்று பெயரிடப்பட்டுள்ளது.

இந்தப் புயல் அந்தமான் தீவுகளை போர்ட் பிளேர் அருகே ஞாயிற்றுக்கிழமை இரவு கடந்து, வடமேற்கு திசையில் நகரும். மேலும் இது தென்கிழக்கு வங்கக் கடலில் நகரும்போது, தீவிர புயலாக வலுப்பெறும். பின்னர் மேற்கு - வடமேற்கு திசையில் நகர்ந்து ஆந்திர மாநிலம் மசூலிப்பட்டினம் மற்றும் கலிங்கப்பட்டினம் இடையில் நவம்பர் 28-ஆம் தேதி கரையை கடக்கும்.

இந்தப் புயலின் திசை மாறினால், தமிழகப் பகுதியில் கரையை கடக்கவும் வாய்ப்புள்ளது என்று அதிகாரிகள் தெரிவித்தனர்.

கடந்த இரு தினங்களுக்கு முன்புதான் ஹெலன் புயல், மசூலிப்பட்டினம் அருகே ஆந்திரத்தை தாக்கியது என்பது குறிப்பிடத்தக்கது.

துறைமுகங்களில் எச்சரிக்கை கூண்டு:புதுவை, கடலூர், நாகை, காரைக்கால், பாம்பன், தூத்துக்குடி ஆகிய துறைமுகங்களில் 2-ம் எண் புயல் எச்சரிக்கைக் கூண்டு ஞாயிற்றுக்கிழமை ஏற்றப்பட்டது.

இதற்கிடையே, நாகை மாவட்டத்தின் அனைத்துப் பகுதிகளிலும் ஞாயிற்றுக்கிழமை காலை முதல் பிற்பகல் வரை தொடர்ந்து மழை பெய்தது. ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்தது. புதுச்சேரி மற்றும் காரைக்கால் மாவட்டத்தில் காலை முதல் பரவலாக மழை பெய்தது. பாம்பன், ராமேசுவரம் கடல் பகுதியில் பலத்த காற்று வீசி வருகிறது. மீனவர்கள் கடலுக்குள் செல்ல வேண்டாம் என எச்சரிக்கப்பட்டுள்ளனர். தமிழகத்தில் மழை: இந்த நிலையில் தமிழகம் மற்றும் புதுவையில் ஆங்காங்கே திங்கள்கிழமை கனமழை பெய்ய வாய்ப்புள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.மேலும் ஞாயிற்றுக்கிழமை காலை வரையிலான 24 மணி நேரத்தில் வத்திராயிருப்பில் அதிகபட்சமாக 150 மி.மீ. மழை பதிவாகியுள்ளது.மற்ற பகுதிகளில் பெய்த மழை அளவு (மில்லி மீட்டரில்): ராஜபாளையம் - 140, நாங்குனேரி - 100, சிவகாசி - 90, சிவகிரி, குளச்சல் - 80, உத்தமபாளையம், சங்கரன்கோவில் - 70, பரங்கிப்பேட்டை, ஸ்ரீவில்லிபுத்தூர், சிதம்பரம் - 60, குன்னூர், நாகர்கோவில் - 50, குழித்துறை, செங்கோட்டை, சத்தியமங்கலம், பாளையங்கோட்டை - 40, செய்யாறு, தஞ்சாவூர், தக்கலை, தூத்துக்குடி, கொள்ளிடம், தென்காசி, கடலூர் - 30, சிதம்பரம், கோத்தகிரி, பாபநாசம், அரக்கோணம், ஜெயங்கொண்டம், மேட்டுப்பாளையம், வேதாரண்யம், மகாபலிபுரம், பேச்சிப்பாறை, கோவை, செங்கல்பட்டு - 20, மரக்காணம், புதுச்சேரி, சென்னை, அரியலூர், திருவள்ளூர், கூடலூர், சீர்காழி, பட்டுக்கோட்டை, திருவாரூர் - 10.

**ஒரு மாதமாக முடங்கிய மீனவர்கள்**

கடந்த ஒரு மாதத்தில் மட்டும், வங்கக் கடலில் 3ஆவது முறையாகத் தீவிர காற்றழுத்த தாழ்வு மண்டலம் உருவாகியுள்ளது. இந்த மண்டலங்கள் புயலாக வலுப்பெற்று தமிழகம் மற்றும் ஆந்திர மாநிலங்களுக்கு இடையே கரையைக் கடக்கின்றன. இதனால் கடல் சீற்றம், பலத்த காற்று போன்ற சாதகமற்ற சூழலால் தமிழகத்தின் வட கடலோர மாவட்ட மீனவர்கள் கடந்த ஒரு மாதமாக கடலுக்குள் செல்லாமல் முடங்கியுள்ளனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

**25.11.2013**

## மூலிகை பொருள் கொள்முதல் நிலையம் அமைக்க கோரிக்கை

கிருஷ்ணகிரி: காட்டு பகுதியில் விளையும் அரிய வகை மூலிகை, தாவரங்களுக்கு வெளி நாட்டில் அதிக வரவேற்பு உள்ளதால் கிருஷ்ணகிரியில், அரசு மூலிகை கொள் முதல் மையம் அமைக்க வேண்டும் என்ற, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்

கிருஷ்ணகிரி மாவட்ட மொத்த புவியியல் பரப்பான, 5 லட்சத்து, 14 ஆயிரத்து, 326 ஹெக்டேரில், 2 லட்சத்து, 2 ஆயிரத்து, 409 ஹெக்டேரில் வனங்கள் உள்ளது. இதில் வனத்திலும் மற்றும் வனம் சா◌ார்ந்த மலை மற்றும் கிராம பகுதிகளில் அரிய வகை மூலிகைகள் அதிகம் கிடைக்கிறது.

குறிப்பாக சிறு குறிச்சான், ஆடுமுட்டான், சித்திரை மூலம், துளசி, வல்லாரை, பொன்னாங்கன்னி உள்பட, நூற்றுக்கும் மேற்பட்ட மூலிகை தாவரங்கள் மாவட்டத்தில் உள்ள காட்டுப்பகுதியில் அதிகம் கிடைத்து வருகிறது.

இவ்வாறு மருத்துவ குணம் கொண்ட அரிய வகை மூலிகை பயிர்களை கிராம பகுதிகளில் உள்ளவர்களிடம், கிருஷ்ணகிரியை சேர்ந்த வியாபாரிகள் குறைந்த விலை வாங்கி வந்து, அதனை வெயிலில் உலர்த்தி விற்பனை செய்கின்றனர்.

இவ்வாறு விற்பனை செய்யப்படும் அரிய வகை மூலிகைகளுக்கு வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. கிருஷ்ணகிரி பகுதியில் சேகரிகப்பட்டு உலர்த்தப்படும் மூலிகைகளை பெங்களூரு, மும்பை மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் இருந்து வரும் சித்த மருந்து தயாரிப்பாளர்கள் மற்றும் நாட்டு மருந்து தயாரிப்பாளர்கள் அதிக அளவில் வாங்கி செல்கின்றனர்.

இங்கிருந்து வாங்கி செல்லும் மூலிகை தாவரங்களை தொழிற்சாலையில் வைத்து பொடியாக்கி வெளி நாடுகளுக்கு வியாபாரிகள் அனுப்பிவைக்கின்றனர்.

கிருஷ்ணகிரி பகுதியில் தற்போது விற்பனை செய்யப்படும், நூற்றுக்கும் மேற்பட்ட

மூலிகை தாவரங்களில் கண்நோய் கிழங்கு எனப்படும் அரிய வகை மூலிகைக்கு வெளிநாடுகளில் அதிக வரவேற்பு உள்ளது.
தற்போது இந்த வகை மூலிகை, ஒரு கிலோ, 700 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. வெளி நாடுகளில் மூலிகைகளை விலை கொடுத்து வாங்கி பயன்படுத்துவது கடந்த சில ஆண்டுகளாக அதிகரித்து வருவதால் ,கிருஷ்ணகிரி மாவட்டத்தில் இந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மூலிகை தாவரங்களை சேகரிப்பதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.
கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மலையோர கிராமங்களில் ஏற்கெனவே பல விவசாயிகள் மூலிகை பயிர்களை பயிரிட்டு வருகின்றனர். இவ்வாறு பயிரிடப்படும் மூலிகை பயிர்களை விற்பனை செய்வதில் பல்வேறு சிரமங்கள் இருப்பதால் கிருஷ்ணகிரியில் அரசு மூலிகை கொள் முதல் மையத்தை துவங்க வேண்டும் என்று விவசாயிகள் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வருகின்றனர். இருப்பினம் கிருஷ்ணிரியில் மூலிகை கொள்முதல் மையம் அமைக்க அரசு எவ்வித நடவடிக்கை எடுக்காமல் காலம் தாழ்த்தி வருவது விவசாயிகளை ஏமாற்றமடைய செய்துள்ளது. விவசாயிகள் பயன்பெறும் வகையில், தமிழக அரசு, கிருஷ்ணகிரியில் மூலிகை கொள்முதல் மையம் அமைக்க விவசாயிகள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை எப்படி? ரகசிய ஆய்வு நடத்திய அரசு செயலர்

ஈரோடு: கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கையின் உண்மை நிலையை கண்டறிய தமிழக அரசு கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை செயலர் விஜயகுமார் ரகசிய ஆய்வு நடத்தினார்,

ஈரோடு மாவட்டத்தில், 3.5 லட்சம் கால்நடைகள் இருப்பதாக கணக்கிடப்பட்டுள்ளது.

தற்போது அதிகளவில் பரவி வரும் கோரி நோய் தாக்குதலில், நூற்றுக்கும் அதிகமான கால்நடைகள் பலியாகியது. இதனால், கால்நடை பராமரிப்புத்துறை மூலம் மருத்துவ முகாம்கள் நடத்தப்பட்டு, கால்நடைகளுக்கு மருந்து கொடுக்கப்பட்டும், மூலிகை கரைசல் கொடுத்தும் கட்டுப்படுத்தும் நடவடிக்கை குறித்து, விவசாயிகளுடன் கால்நடை பராமரிப்புத்துறை முயற்சிகள் மேற்கொள்கிறது.

இந்நிலையில், கர்நாடகா, கேரளா, ஆந்திர போன்ற வெளிமாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும் கால்நடைகள் மூலம், நோய் பரவுவதை கண்டறிந்து, வெளிமாநில கால்நடை வரத்தையும், சந்தை நடத்துவதையும் மாவட்ட நிர்வாகம் தடை செய்துள்ளது.

இதனால், கோமாரி நோய் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

பொது மக்களிடமும், விவசாயிகளிடமும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில், ஈரோடு மாவட்டத்தில் உள்ள, 225 பஞ்சாயத்துக்களில் கிராமசபை கூட்டம் நடத்த, தமிழக அரசு உத்தரவை தொடர்ந்து, கலெக்டர் சண்முகம் தலைமையில் லக்காபுரத்தில் கிராமசபை கூட்டம் நடந்தது. அதை தொடர்ந்து மாவட்டத்தின் அனைத்து கிராமங்களிலும் கிராமசபை கூட்டம் நடத்தி முடிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை, ஈரோடு மாவட்டத்தில் முழு வீச்சில் நடக்கிறதா, என தமிழக அரசு கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன் வளத்துறை செயலர் விஜயகுமார், கடந்த, 21ம் தேதி திடீர் ஆய்வு மேற்கொண்டார். ஈரோடு கலெக்டர் சண்முகம் உடன், ஆய்வை நடத்திய அரசு செயலர் விஜயகுமார், கால்நடை பராமரிப்புத்துறை அதிகாரிகளுக்கு கூட தெரியாமல் ரகசியமாக வைக்கப்பட்டிருந்தது.

ஈரோடு மாவட்டத்தின், பல பகுதிகளில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களிடம் சென்று நேரில் விசாரணை மேற்கொண்ட அவர், மாவட்ட நிர்வாகத்தின் சார்பில் கால்நடை சந்தைகள், பிற மாநிலங்களில் இருந்து கொண்டு வரப்படும், அடிமாடுகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ள நடவடிக்கையை பாராட்டினார்.

எந்தெந்த பகுதியில் இன்னும் கோமாரி பாதிப்பு உள்ளது என்பதை கண்டறிந்து, அப்பகுதியில் கூடுதலாக ஒரு முகாம் நடத்த யோசனை தெரிவித்து சென்றுள்ளார்.

## ரூ.95 லட்சம் மதிப்பில் கொப்பரை தேங்காய் ஏலம்

பெருந்துறை: பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த ஏலத்தில், 95 லட்சம் ரூபாய்க்கு, கொப்பரை தேங்காய்கள் ஏலம் போனது.

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், வாரம் தோறும் புதன் மற்றும் சனிக்கிழமைகளில் கொப்பரை தேங்காய் ஏலம் நடக்கிறது. கடந்த சனிக்கிழமை நடந்த ஏலத்துக்கு, விவசாயிகளிடம் இருந்து, 2,622 மூட்டைகளில், 1.30 லட்சம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர்.

முதல் தரம் கொப்பரை தேங்காய், குறைந்தபட்ச விலையாக கிலோ, 76 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 78.75 ரூபாய்க்கும் விற்பனையானது. 2ம் தரம் கொப்பரை தேங்காய் குறைந்த பட்ச விலை கிலோ, 40.90 ரூபாய்க்கும், அதிகபட்ச விலையாக, 74.65 ரூபாய்க்கும் ஏலம் போனது. மொத்தம், 95 லட்சம் ரூபாய்க்கு தேங்காய்கள் ஏலம் நடந்ததாக, சங்க தலைவர் அருள்ஜோதிசெல்வராஜ் தெரிவித்தார்.

## வானி ஆற்றில் தடுப்பணை கட்ட விவசாயிகள் கோரிக்கை

கோபிசெட்டிபாளையம்: பெரிய கொடிவேரி-அரக்கன்கோட்டை இடையே பவானி ஆற்றில் பாலம் கட்டுவதுக்கு பதிலாக தடுப்பணை கட்டினால் நீர்மட்டம் உயர்வதோடு, மின்சாரமும் கிடைக்குமென, விவசாய சங்க பிரதிநிதிகள் வலியுறுத்துகின்றனர்.

கொடிவேரி பவானி ஆற்றில் பெரியகொடிவேரி, அக்கரை கொடிவேரி கிராம மக்கள் பயன்பெறும் வகையில், மத்திய சாலை நிதி திட்டத்தின் (சி.ஆர்.எஃப்) கீழ், 12 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பாலம் கட்ட மத்திய அரசு நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

பாலம் கட்ட, இடம் தேர்வுக்காக தேசிய நெடுஞ்சாலை துறை அதிகாரிகள், பொதுப்பணி துறை அதிகாரிகள் கொண்ட குழுவினர் ஆய்வு மேற்கொண்டுள்ளனர்.

பல கோடி ரூபாய் செலவிட்டு பாலம் மட்டும் கட்டுவதற்கு பதிலாக, நெடுஞ்சாலைத்துறை, பொதுப்பணித்துறை, மின்சாரத்துறை ஆகிய மூன்று துறைகள் ஒன்றிணைந்து ஒரு தடுப்பணை கட்டினால், இப்பகுதி நீர்மட்டம் உயர்வதோடு, மின்சாரம் கிடைக்கவும் வாய்ப்புள்ளதாக, விவசாய பாசன சங்க பிரதிநிதிகள் வலியுறுத்தி உள்ளனர்.

அரக்கன்கோட்டை பாசன விவசாயிகள் சங்க தலைவர் தளபதி கூறியதாவது: அரக்கன்கோட்டை, பெரியகோடிவேரி இடையே, 12 கோடி ரூபாய் செலவிட்டு பாலம் கட்டுவதற்கான ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. பாலம் கட்டுவதன் மூலம், போக்குவரத்துக்கு மட்டும் நன்மை ஏற்படும்.

பொதுப்பணித்துறை, நெடுஞ்சாலை துறை, மின்சாரத்துறை ஆகிய மூன்று துறைகளும் ஒன்றிணைந்து பெரிய பட்ஜெட்டில் தடுப்பணை கட்டினால், இரண்டு மெகாவாட் அளவு மின்சாரம் கிடைக்க வாய்ப்புள்ளது.

தடுப்பணையின் மூலம் பெரியகொடிவேரி, அரக்கன்கோட்டை ஆகிய பகுதிகளின் நீர்மட்டமும் உயரும். மின்சார தட்டுப்பாடு உள்ள நிலையில், இதுபோன்ற திட்டங்கள் பயனுள்ளதாக இருக்கும். வெண்டிபாளையம் தடுப்பணையை போல், இங்கு தடுப்பணை கட்டினால், போக்குவரத்துக்கும் பயன்படும்.

பாலம் மட்டும் தனியாக கட்டுவதை தவிர்த்து தடுப்பணையாக கட்ட வேண்டும், என்றார்.

## நடப்பு நிதியாண்டின் ஆறு மாதங்களில்வெளி சந்தையில் 11.5 லட்சம் டன் கோதுமை விற்பனை:இடபற்றாக்குறை



புதுடில்லி:கடந்த சில வாரங்களில், மத்திய அரசு, 11.5 லட்சம் டன் கோதுமையை, வெளிச் சந்தையில் விற்பனை செய்து உள்ளது. இவற்றில், 5.50 லட்சம் டன்னுக்கும் அதிகமான கோதுமை, டில்லி, பஞ்சாப், அரியானா மாநிலங்களில் விற்பனை செய்யப்பட்டுள்ளது.

கையிருப்பு:அளவிற்கு அதிகமான கோதுமை உற்பத்தி மற்றும் கையிருப்பை

பாதுகாப்பாக வைக்க போதிய கிடங்கு வசதிகள் இல்லாதது போன்ற வற்றால், மத்திய அரசு, கோதுமையை வெளிச் சந்தையில் விற்பனை செய்து வருகிறது.இவற்றை, மாவு ஆலைகள், வர்த்தகர்கள் உள்ளிட்டோர், மொத்தமாக கொள்முதல் செய்து வருகின்றனர்.இந்த வகையில், வரும், 2014ம் ஆண்டு, மார்ச் மாதத்திற்குள், 85 லட்சம் டன் கோதுமையை விற்பனை செய்ய, மத்திய அரசு திட்டமிட்டுள்ளது.சென்ற, 2012–13ம் நிதியாண்டில், 9.24 கோடி டன் கோதுமை உற்பத்தி செய்யப்பட்டது.

இந்திய உணவு கழகம்:நடப்பு நவம்பர் மாத துவக்க நிலவரப்படி, பொதுத் துறையை சேர்ந்த, இந்திய உணவு கழகத்திடம், 3.40 கோடி டன் கோதுமை கையிருப்பு உள்ளதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இது, இருப்பு வைக்க வேண்டிய அளவை விட, அதிகமாகும்.போதிய கிடங்கு வசதியின்றி, வெட்ட வெளியில் வைக்கப்படும் கோதுமை, மழை மற்றும் பனிப்பொழிவால் பாழாவதை தடுக்க, அதனை வெளிச்சந்தையில் விற்க மத்திய அரசு அனுமதி அளித்து உள்ளது.

போக்குவரத்து செலவு:இதையடுத்து, இந்திய உணவு கழகம், வாரம்தோறும், மொத்த வியாபாரிகளுக்கு, ஒரு குவிண்டால், கோதுமையை 1,500 ரூபாய்க்கு விற்பனை செய்து வருகிறது. இத்துடன் போக்குவரத்து செலவையும் கணக்கிட்டால், சராசரியாக, ஒரு குவிண்டால் கோதுமையின் விலை, 1,603 ரூபாயாகும்.கடந்த சில வாரங்களில், தமிழகம், மேற்குவங்கம், ஒடிசா ஆகிய மாநிலங்களை சேர்ந்த வர்த்தகர்களுக்கு, முறையே, 65 ஆயிரம் டன், 64 ஆயிரம் டன், 58 ஆயிரம் டன் கோதுமை விற்பனை செய்யப்பட்டு உள்ளது.

## உணவு தயாரிப்பு பயிற்சி

ப.வேலுார் யூனியனைச் சேர்ந்த அங்கன்வாடி சமையலர் மற்றும் பணியாளர்களுக்கு, மாவட்ட உணவு பாதுகாப்பு துறையின் சார்பில், சுகாதாரமான உணவு தயாரிப்பு குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.

சமையல் செய்யும் போது, தரமான சமையல் பொருட்களை பயன்படுத்துவது, காலாவதியான பொருட்கள் குறித்து விழிப்புணர்வு, சுகாதாரமான உணவின்

அவசியம், அங்கன்வாடி பணியாளர்கள் பராமரிக்க வேண்டிய பதிவேடு, உணவு மாதிரி எடுத்து வைத்தல் குறித்து ஆலோசனை வழங்கப்பட்டது.

## முட்டை கொள்முதல் விலை அதிகரிப்பு உற்பத்தி குறைப்பால் 450 காசை எட்டியது

நாமக்கல்: "தென் மாநில முட்டை உற்பத்தியாளர்கள், முட்டைக் கோழி வளர்ப்பை குறைத்துக் கொண்டதால், முட்டை விலை, 450 காசு வரை உயர்ந்துள்ளது' என, பண்ணையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

தேசிய அளவில், அதிகபட்சமாக ஆந்திரா, 30 சதவீதம், தமிழகம், 20 சதவீதம், மஹாராஷ்டிரா, ஹரியானா, பஞ்சாப், மேற்குவங்கம் ஆகியவை, 10 சதவீதம், கர்நாடகா, கேரளா, ஒடிஸா ஆகிய மாநிலங்கள், 5 சதவீதம் அளவிற்கு முட்டை உற்பத்தி செய்கின்றன.

அவை, அந்தந்த பகுதியில் உள்ள தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் பரிந்துரையின் படி, முட்டையின் பண்ணை மற்றும் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கின்றன. உள்நாட்டு தேவை, வெளிநாட்டு ஏற்றுமதி, உற்பத்தி செலவு மற்றும் நுகர்வை அடிப்படையாக கொண்டு, விலை நிர்ணயம் செய்யப்பட்டு, சந்தைக்கு விற்பனைக்கு வருகிறது.

அந்த வகையில், கர்நாடகா மாநில தஸரா பண்டிகை, தமிழகத்தில், புரட்டாசி மாதம், கேரளாவில் கார்த்திகை மாத ஐயப்ப சீஸன் ஆகிய காரணங்களால், முட்டையின் நுகர்வு குறைந்து, ஒவ்வொரு ஆண்டும், விலை வீழ்ச்சியடையும். ஆனால், நடப்பாண்டு, முன் எப்போதும் இல்லாத அளவுக்கு, முட்டையின் தேவை அதிகரித்து, விலை உயர்ந்து வருகிறது.

வடகிழக்கு பருவமழை, குளிர்கால சீதோஷ்ண நிலை, வரும் ஜனவரி மாத ஆங்கில புத்தாண்டு, டிசம்பர் மாத கிறிஸ்துமஸ் ஆகிய காரணங்களால், முட்டை விலை, மேலும் உயரும் எனக் கூறப்படுகிறது. அதற்கு முக்கிய காரணமாக, தென்மாநில முட்டை உற்பத்தியாளர்கள், நடப்பாண்டில், முட்டைக் கோழி வளர்ப்பின்

எண்ணிக்கையை குறைத்துக் கொண்டதால், உற்பத்தி குறைந்துள்ளது எனக் கூறப்படுகிறது.

முட்டை மார்க்கெட்டில், தேவை அதிகமாக இருந்தும், சப்ளை செய்ய முடியாத நிலை நீடிக்கிறது. அதனால், முட்டை மண்டலங்கள், கொள்முதல் விலையை உயர்த்தி வருகின்றன. குறிப்பாக, வடமாநிலங்களில், வழக்கமாக குறைந்தளவு முட்டை உற்பத்தி செய்யப்படுவதால், அந்த முட்டை மண்டலங்களில், தேவைக்கேற்ற சப்ளை செய்ய முடியவில்லை.

இந்நிலையில், நேற்றைய நிலவரப்படி, அதிகபட்சமாக கோல்கத்தா, 450, அஹமதாபாத், 422, பர்வாலா, 414, போபால், 405, புதுடில்லி, 430, இண்டூர், 410, லூதியானா, 411, பஞ்சாப், 411, ராய்பூர், 400 மற்றும் நாமக்கல், 398, காசு என, கிடுகிடுவென விலை உயர்ந்துள்ளது.

பண்ணையாளர்கள் சிலர் கூறியதாவது:

தென் மாநிலத்தில், அதிகளவு முட்டை உற்பத்தி செய்யும், ஆந்திரா, தமிழக முட்டை உற்பத்தியாளர்கள், முட்டை உற்பத்தி செலவு அதிகமாவதால், நடப்பாண்டு, முட்டைக் கோழி வளர்ப்பு எண்ணிக்கையை குறைத்துக் கொண்டனர். அதில், நாமக்கல் முட்டை மண்டலத்தில் மட்டும், நான்கு முதல் ஆறு சதவீத முட்டை உற்பத்தி குறைக்கப்பட்டுள்ளது.

வடமாநிலத்தில், முட்டை தேவை அதிகமாக இருப்பதால், அங்கு விலை உயர்ந்துள்ளது. தென்மாநிலங்களில் முட்டை உற்பத்தி குறைத்துக் கொண்டதால், வடமாநில விலையை விடை, சற்று குறைத்து விற்கப்படுகிறது. ஆங்கில புத்தாண்டு, கிறிஸ்துமஸ் விழாக்கள் முடியும் வரை, முட்டை விலை

## கடும் வறட்சியால் சாகுபடி பரப்பு சரிவு மாற்று வேலைக்கு செல்லும் விவசாயிகள்

மேட்டூர்: கொளத்தூர் ஒன்றியத்தில், கடந்த, இரு ஆண்டாக நீடிக்கும் கடும் வறட்சியால், சாகுபடி பரப்பளவு குறைந்து விட்டது. பாதிக்கப்பட்ட விவசாயிகள் பெருந்துறை, திருப்பூர் பகுதிகளில் உள்ள ஆயத்த ஆடை நிறுவனங்களுக்கு கூலி வேலைக்கு செல்வது அதிகரித்து வருகிறது.

மேட்டூர் தாலுகா, கொளத்தூர் ஒன்றியத்தில், 2,000 ஹெக்டேர் நிலப்பரப்புக்கு மேல் விவசாயிகள் நெல், சோளம், மிளகாய், வாழை, மஞ்சள் உள்ளிட்ட பயிர் சாகுபடி செய்கின்றனர். கடந்த ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழை பொய்த்ததால், கொளத்தூர் ஒன்றியத்தில் சாகுபடி பரப்பு குறைந்தது.

நடப்பாண்டும் கொளத்தூர் ஒன்றியத்தில் வடகிழக்கு பருவமழை பொய்த்ததால் ஏரிகள், குளங்கள் வறண்டு கிடக்கிறது. இதனால், நிலத்தடி நீரும் குறைந்து விட்டதால் கடந்த ஆண்டை விட நடப்பாண்டு சாகுபடி பரப்பு மேலும் குறைந்துள்ளது.

கடந்த ஆண்டு, 325 ஹெக்டேரில் வாழை சாகுபடி செய்த நிலையில், நடப்பாண்டு சாகுபடி பரப்பு, 235 ஹெக்டேராகவும், 237 ஹெக்டேராக இருந்த மஞ்சள் சாகுபடி, 113 ஹெக்டேராகவும் சரிந்துள்ளது. மேலும், வறட்சியால் விவசாயிகள் பலர் தங்கள் நிலத்தில் பயிர் சாகுபடி செய்யாமல் தரிசாக விட்டுள்ளனர்.

வறட்சியால் பயிர் சாகுபடி செய்யாததால், வருவாய் இழந்து தவிக்கும் விவசாயிகள் சமீபகாலமாக பெருந்துறை, திருப்பூர் பகுதி ஆயத்த ஆடை நிறுவனங்களுக்கு கூலி வேலைக்கு செல்ல துவங்கியுள்ளனர். கொளத்தூரில் இருந்து பெருந்துறை ஆயத்த ஆடை தயாரிப்பு நிறுவனங்களுக்கு பஸ்கள் இயக்கப்படுகிறது.

நடப்பாண்டிலும் பருவமழை பொய்த்ததால், கொளத்தூர் பகுதியில் சொந்தமாக பல ஏக்கர் நிலம் வைத்திருக்கும் விவசாயிகள் கூட, நஷ்டத்தை தவிர்க்க நிலத்தை தரிசாக போட்டு விட்டு, ஆயத்த ஆடை நிறுவனங்களுக்கு செல்லும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர்.

## ஆத்தூரில் மஞ்சள் ஏலம் ரூ.30 லட்சம் வர்த்தகம்

ஆத்தூர்: ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் நடந்த மஞ்சள் ஏலத்தில், 800 மூட்டை மஞ்சள், 30 லட்சம் ரூபாய்க்கு விற்பனையானது.

ஆத்தூர், புதுப்பேட்டை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில், நேற்று முன்தினம் நடந்த மஞ்சள் ஏலத்துக்கு, 200 விவசாயிகள், தங்கள்

விளைவித்த, 800 மூட்டை மஞ்சளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர்.

ஏலத்தில், விரலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 5,800 ரூபாய்க்கும், அதிகபட்சம், 8,200 ரூபாய்க்கும், உருண்டை மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 4,800, அதிகபட்சம், 5,800 ரூபாய்க்கும், பனங்காலி மஞ்சள் குவிண்டால் குறைந்தபட்சம், 8,000, அதிகபட்சம், 11 ஆயிரத்து,140 ரூபாய்க்கும் விற்பனையானது.

ஏலத்தில், 15க்கும் மேற்பட்ட வியாபாரிகள் கலந்து கொண்டு, 800 மூட்டை மஞ்சளை, 30 லட்சம் ரூபாய்க்கு வாங்கிச் சென்றனர். கடந்த வாரம் நடந்த மஞ்சள் ஏலத்தை காட்டிலும், நேற்று முன்தினம் நடந்த ஏலத்தில், குவிண்டாலுக்கு விரலி மஞ்சள், 1,700 ரூபாய், பனங்காலி மஞ்சள், 1,051 ரூபாய் விலை உயர்ந்ததால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## கோமுகி அணை நிரம்புவதால் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி

கச்சிராயபாளையம் : கோமுகி அணை நிரம்பி வருவதால் பாசன விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

கச்சிராயபாளையம் அடுத்த கல்வராயன்மலை அடிவாரத்தில் கோமுகி அணை அமைந்துள்ளது. இந்த அணையை நம்பி 10 ஆயிரத்து 500 ஏக்கர் விவசாய நிலங்கள் உள்ளன.

இப்பகுதியில் உள்ள கல்வராயன்மலையில் பெய்யும் மழை நீர் முழுவதும் கல்படை, மல்லிகைப்பாடி, பொட்டியம் ஆறுகளின் வழியாக கோமுகி அணைக்கு வந்து நிரம்புகிறது.

கடந்த வாரம் பெய்த வடக்கிழக்கு பருவ மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்தது. அணையின் மொத்த கொள்ளவான 46 அடியில்(560 மில்லியன் கன அடி), தற்போது 40 அடிக்கு( 362 மில்லியன் கன அடி) நீர் மட்டம் உயர்ந்துள்ளது.கோமுகி அணை நிரம்பி வருவதால், பாசன விவசாயிகள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

## வீடூர் அணை தண்ணீர் இன்றி வறண்டது : கவலையில் மூழ்கிய விவசாயிகள்

திண்டிவனம் : கடல் போல் காட்சியளித்த வீடூர் அணை, மழை பெய்யாததால் குளம் போல் காட்சியளிக்கின்றது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

திண்டிவனம் அருகே உள்ள வீடூர் அணை கடந்த 1958 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21ந் தேதி ,அப்போதைய சென்னை மாகாண தலைமை அமைச்சர் காமராஜரால் திறந்து வைக்கப்பட்டது.

அணையின் சிறப்பு

இந்த அணை அப்பொழுது ரூபாய் 89 லட்சம் செலவில் கட்டப்பட்டது. அணைக்கு 501 சதுர மைல் தூரத்தில் இருந்து தண்ணீர் வருகிறது. ஆயிரத்து 911 ஏக்கர் பரப்பளவில் தண்ணீர் தேக்கி வைக்கப்பபடுகிறது. அணையின் மொத்த நீளம் 15 ஆயிரத்து 800 அடி, அஸ்திவாரத்தில் இருந்து அணையின் உயரம் 62 அடி .நீர் தேக்க கொள்ளளவு 605 மில்லியன் கன அடியாகும்.

நீரின் பயன்பாடு

பருவமழை பெய்த பின் வீடூர் அணையில் வருடந் தோறும் அக்டோபர் மாதம் 1ந் தேதியில் இருந்து பிப்ரவரி 12ந் தேதி வரை பாசனத்திற்காக தண்ணீர் திறந்து விடப்படும். தமிழகத்தில் 2200 ஏக்கரும், புதுச்சேரியில் ஆயிரம் ஏக்கரும் விவசாய நிலங்கள் பயன் பெறுகின்றன. மேலும் இந்த அணையின் தண்ணீர்தான் ஊசுட்டேரிக்கு செல்கின்றது.

பருவமழை ஏமாற்றம்

வருடந்தோறும் அணையில் தண்ணீர் இருப்பு இருக்கும் .இந்த ஆண்டு பருவமழை பொய்த்ததால் தண்ணீரின்றி வறண்டு உள்ளது. ஆங்காங்கே மண்வெடிப்பு ஏற்பட்டு பாலைவனம் போல் காட்சியளிக்கிறது. வீடூர் அணையில் தண்ணீர் இல்லாததால் அணையை சுற்றியுள்ள இருபதுக்கும் மே ற்பட்ட கிராமங்களில் நிலத்தடி நீர் குறைந்துள்ளது. வருடம் தோறும் இந்த மாதங்களில் விவசாயிகள் பயிர் செய்வது வழக்கம். தற்போது தண்ணீர் இல்லாததால் நிலங்கள் தரிசாக உள்ளன. இதனால் விவசாயிகள் பெரும் கவலையடைந்துள்ளனர். டெல்டா மாவட்டங்களில் பாசனத்திற்கு தண்ணீர் இல்லாதபோது அரசு விவசாயிகளுக்கு நிவாரணம் வழங்கும் .அதேபோல் இங்கும் வழங்க வேண்டும் என இப்பகுதி

விவசாயிள் எதிர்பார்க்கின்றனர்.

சுற்றுலா பயணிகள் ஏமாற்றம்

வீடூர் அணை இந்த மாதம் கடல் போல் ரம்யமாக காட்சியளிக்கும் . அங்கு செயற்கை நீருற்று, விளையாட்டு திடல் உள்ளதால், புதுச்சேரி, விழுப்புரம், வானூர், மரக்காணம், செஞ்சி, ஒலக்கூர் ஆகிய பகுதிகளில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி மாணவ, மாணவிகள் மற்றும் பொதுமக்கள் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்வார்கள். அணையில் தண்ணீர் இல்லாமல் குளம் போல் காட்சியளிப்பதால் சுற்றுலா பயணிகள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்

## கோமாரி நோய் தடுப்பு விழிப்புணர்வு கூட்டம்

கண்டமங்கலம் : கண்டமங்கலம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கால்நடைகளுக்கு கோமாரி நோய் தடுப்பு குறித்து ஊராட்சி தலைவர்கள் மற்றும் செயலர்களுக்கான விழிப்புணர்வு கூட்டம் நடந்தது.

ஒன்றிய சேர்மன் சர்மிளாதேவி நெடுஞ்செழியன் தலைமை தாங்கினார். வட்டார வளர்ச்சி அலுவலர்கள் கலியமூர்த்தி, மாணிக்கம் முன்னிலை வகித்தனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயராமன் வரவேற்றார்.

உதவி திட்ட அலுவலர் தினகர்சாம்சன்பாபு, கால்நடை உதவி மருத்துவர்கள் பாரிவேல்,

பார்த்திபன் ஆகியோர் கால்நடைகளுக்கு வரும் கோமாரி நோய் தடுப்பு குறித்து விளக்கி

பேசினர்.

ஒன்றியத்தை சேர்ந்த ஊராட்சி தலைவர்கள், ஊராட்சி செயலர்கள் மற்றும் உதவி கால்நடை மருத்துவர்கள், மருத்துவ அலுவலர்கள் உள்பட பலர் கலந்துகொண் டனர். துணை வட்டார வளர்ச்சி அலுவலர் மாரியப்பன் நன்றி கூறினார்.

## தொடர் மழையால் நீர்வரத்து துவக்கம்

திருவெண்ணெய்'நல்லூர் : திருவெண்ணெய்நல்லூர் அருகே பெய்த தொடர் மழையால் வாய்க்காலில் நீர்வரத்து துவங்கியது. விழுப்புரம் மாவட் டத்தில் சில தினங்களாக தொடர்மழை பெய்தது. இதனால் அணைகள் மற்றும் ஏரிகளில் நீர் ஓரளவிற்கு சேகரமாகியுள்ளது.

திருவெண்ணெய்நல்லூர் அடுத்த ஆலங்குப்பம் ரயில்வே கேட் பகுதியில் பெய்த மழையால் மலட்டாறுக்கு செல்லும் வாய்க்காலில் நீர்வரத்து ஏற்பட்டது. நேற்று பள்ளிக்கு விடுமுறை விடப்பட்டதால், அப்பகுதி மாணவர்கள் ஆபத்தை உணராமல் வாய்க்காலில் குதித்தும், நீச்சலடித்தும் குளித்து மகிழ்ந்தனர்.ஆபத்தை தடுக்கும் வகையில் மாணவர்களை கண்காணிக்க வேண்டியது பெற்றோர்களின் கடமை.

## போதிய வருமானம் இல்லாமல் விவசாயிகள் பாதிப்பு :எண்ணெய் பனைகளை அகற்றுவதில் ஆர்வம்

விழுப்புரம் : எண்ணெய் பனை சாகுபடியில் போதிய வருமானம் மற்றும் வழிகாட்டுதல் இல்லாததால், விவசாயிகள் நடவு செய்துள்ள மரங்களை அப்புறப்படுத்தி வருகின்றனர்.

மக்களின் அன்றாட தேவைகளில் ஒன்றாக சமையல் எண்ணெய் உள்ளது. பெருகிவரும் மக்கள் தொகைக்கு ஏற்ப, இந்தியாவில் எண்ணெய் வித்துகள் உற்பத்தி இல்லை. இதனால் வெளி நாடுகளிலிருந்து பாமாயில் உள்ளிட்ட எண்ணெய்கள் இறக்குமதி செய்யப்படுகின்றது.

இவற்றை தவிர்க்கவும், நாட்டின் கூடுதல் செலவை கட்டுப்படுத்தவும், நாடு முழுவதும் எண்ணெய்பனை சாகுபடி செய்யும் திட்டத்தை மத்திய அரசு தோட்டக்கலை துறை மூலம் அறிமுகப்படுத்தியது.

இதன் படி துவக்கத்தில் தரிசு மற்றும் மானாவாரி நிலங்களில், எண்ணெய்பனை சாகுபடி செய்யப்பட்டன. இதில் போதிய அளவு முன்னேற்றம் இல்லாததால், விவசாயிகளின் நிலங்களில் எண்ணெய் பனை சாகுபடி செய்ய திட்டமிடப்பட்டது. இதனால் தோட்டக்கலைத் துறை மூலம், பனை சாகுபடியை வேகமாக விரிவுபடுத்த திட்டமிடப்பட்டது. சில தனியார் நிறுவனங்களும் எண்ணெய்பனை மரக்கன்றுகளை மான்ய விலையில் விவசாயிகளுக்கு வழங்கியது. இதற்கான ரசாயன உரங்களும் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது.

மூன்றாண்டிற்கு பின் மரங்கள் வளர்ந்து எண்ணெய்பனை பழங்கள் அறுவடை செய்யப்படும் எனவும், தனியார் ஆலை நிர்வாகமே, பழங்களை அறுவடை செய்து, தோட்டத்திலேயே கொள்முதல் செய்து கொள்ளும் எனவும் துவக்கத்தில் விளம்பரம் செய்யப்பட்டது.

மேலும் இந்த பயிருக்கு ஒருமுறை முதலீடு செய்து, மூன்றாண்டுகள் வரை பராமரித்தால் போதும், தொடர்ந்து 50 ஆண்டுகளுக்கு மேல் நிரந்தர லாபம் கிடைக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

விவசாய பணிகளுக்கு, கடந்த 5 ஆண்டுகளுக்கு முன் ஏற்பட்ட ஆட்கள் பற்றாக்குறை, கூலி உயர்வு போன்றவற்றால், வேறு வழியில்லை என்று, முப்போகமும் நெல் விளையும், நஞ்சை நிலத்திலும், ஏரி பாசனம் மற்றும் கிணற்றுப் பாசனம் உள்ள நிலங்களிலும், எண்ணெய்பனை மரக்கன்றுகள் நடவு செய்வதில் விவசாயிகள் அதிக ஆர்வம் செலுத்தினர்.

இதனால் கரும்பு, பருத்தி போன்ற பணப் பயிர் செய்யப்பட்ட நிலத்திலும் எண்ணெய் பனை கன்றுகளை விவசாயிகள் நடவு செய்தனர்.

இவ்வாறு நடவு செய்து, ஐந்தாண்டுகள் கடந்த மரக்கன்றுகள் தற்போது குலை தள்ளி வருகிறது.

ஆனாலும் இவற்றை விவசாயிகளே ஆட்கள் வைத்து அறுவடை செய்து, தனியார் நிறுவனங்கள் குறிப்பிடும் இடத்திற்கு லாரிகள் மூலம் கொண்டு சென்று, விற்பனை செய்கின்றனர்.

இதனால் விவசாயிகளுக்கு போக்குவரத்து செலவு அதிகம் ஏற்பட்டு, லாபம் இல்லை என்று வேதனைப்படுகின்றனர். மேலும் விற்பனை செய்யப்படும் எண்ணெய் பனை பழங்களுக்கு நிரந்தர விலை நிர்ணயிக்கப்படுவதில்லை.

இது குறித்து விவசாயிகள் பலமுறை, முதல்வர் உள்ளிட்ட உயர் அதிகாரிகளை சந்தித்தும், நிரந்தர விலை நிர்ணயம் செய்ய கோரிக்கை விடுத்தும் பயன் கிடைக்கவில்லை. இதனால் பாதிக்கப்பட்ட விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த விவசாயிகள் பலரும் மிகுந்த வேதனை அடைந்துள்ளனர்.

இவர்களில் சிலர், தங்கள் நிலங்களில் நடவு செய்யப்பட்ட எண்ணெய் பனை மரங்கள், குலை தள்ளிய நிலையில் இருந்தாலும், பராமரிப்பு பணிகளில் ஏற்பட்டுள்ள சிக்கல்மற்றும் கொள்முதல் விலையில் ஏற்பட்ட சரிவு காரணமாக, மரங்களை வெட்டி அப்புறப்படுத்தி வருகின்றனர்.

வேளாண்துறை அலுவலர்கள் மற்றும் தனியார் எண்ணெய்பனை ஆலை

நிர்வாகத்தினர் துரித நடவடிக்கை மூலம், விவசாயிகளுக்கு உரிய வழிகாட்டுதல் மற்றும் பராமரிப்பு பயிற்சிகளை வழங்க வேண்டும்.

விவசாயிகளிடம் கொள்முதல் செய்யப்படும் பழங்களுக்கு, நிரந்தரமான விலை வழங்கிடவும் அரசு சார்பில் உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும்.

## விதைப்பு துவங்கியும் விதை நெல் தட்டுப்பாடு நடையாய் நடக்கும் விவசாயிகள்

திருவண்ணாமலை: சான்று பெற்ற விதை நெல் கிடைக்காமல், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

திருவண்ணாமலை மாவட்டம், விவசாய தொழிலை பிரதானமாக கொண்ட மாவட்டம் ஆகும். இங்கு, நெல், கரும்பு, மணிலா, ஆகியவை அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது.

மேலும், சன்னரக நெல் உற்பத்தியில், திருவண்ணாமலை மாவட்டம், தொடர்ந்து குறிப்பிடத்தக்க இடத்தில் உள்ளது. இந்தாண்டு பருவமழை பொய்த்ததாலும், கடுமையான மின்வெட்டு பிரச்னையாலும், விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

ஆனாலும், விவசாயிகள் கிணற்று பாசனத்தை நம்பி, நெல் சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். வேளாண்துறை கணக்கெடுப்பு படி, திருவண்ணாமலை மாவட்டத்தில், ஆண்டுக்கு, 1.25 லட்சம் ஹெக்டர் பரப்பளவில், நெற்பயிர் சாகுபடி செய்யப்பட்டு வந்தது.

ஆனால், இந்தாண்டு சம்பா சாகுபடி பரப்பளவு, வழக்கத்தைவிட, 30 சதவீதம் வரை குறைந்துள்ளது. சமீபத்தில் பெய்த மழையை நம்பி, நவரை பட்ட சாகுபடிக்கு விவசாயிகள் தயாராகி வருகின்றனர்.

நெல் சாகுபடி பருவத்தின்போது, அந்தந்த பட்டத்துக்கு ஏற்ற சான்று பெற்ற விதை நேர்த்தி செய்யப்பட்ட, ஏ.டி.டி -37 ஏ.டி.டி. -43 ஏ.டி.டி. -45,வெள்ளை பொன்னி ஆகிய நெல் ரகங்களை, மாவட்டத்தில் உள்ள, 41 வேளாண் விரிவாக்க மையங்கள் மூலம் விவசாயிகளுக்கு, வழங்கப்படுவது வழக்கம்.

மேலும், விதை நெல் விலையில், ஒரு கிலோவுக்கு, ஐந்து ரூபாய் மானியம்

வழங்கப்படும். ஆனால் இந்த ஆண்டு நவரை பட்ட சாகுபடிக்கான விதைப்பு காலம் தொடங்கிவிட்ட நிலையில், விவசாயிகளுக்கு, இதுவரை விதை நெல் கிடைக்கவில்லை.

மேலும், விதை நெல்லுக்காக விவசாயிகள், வேளாண் விரிவாக்க மையங்களுக்கு நடையாய் நடக்கும் அவல நிலை ஏற்பட்டுள்ளது.

இதுகுறித்து விவசாயிகள் தெரிவித்ததாவது:

மாவட்டத்தின் மொத்த நெற்பயிர் சாகுபடியில், 20 சதவீத பரப்பளவுக்கு தேவையான விதை நெல், ஒவ்வொரு பருவத்திலும் மானிய விலையில் வழங்கப்படும். ஒரு ஹெக்டேருக்கு சாதா நடவுக்கு, 50 கிலோ விதை நெல், ஒற்றை நாற்று நடவுக்கு, 10 கிலோ விதை நெல் என கணக்கிடப்பட்டு, முன்கூட்டியே வேளாண் துறை விதை நெல் கொள்முதல் செய்திருக்க வேண்டும்.

ஆனால், மாவட்டத்தில், நவரை பட்டம் துவங்கியுள்ள நிலையில், தற்போது தான், 50 டன் விதை நெல் கொள்முதல் செய்து, சுத்திகரிப்புபணிகள் நடந்து வருவதாக கூறப்படுகிறது.

மேலும், வேளாண் விரிவாக்க மையங்களுக்கு அனுப்பப்படும் விதை நெல், சிறு, குறு விவசாயிகளுக்கு பகிர்ந்தளிக்காமல், ஒட்டு மொத்தமாக விற்பனை செய்யப்படும் நிலை உள்ளது.

இதனால், வேளாண் துறை மூலம் விதை நெல் கிடைக்காததால், விவசாயிகள், வெளி மார்க்கெட்டில் சான்று பெறாத விதைகளை, கூடுதல் விலைக்கு வாங்க வேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். இதனால், விளைச்சல் கடுமையாக பாதிக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது.

நெல் சாகுபடி மற்றும் உற்பத்தியை பெருக்க, மாவட்ட நிர்வாகம், வேளாண்மைத்துறை மூலம், அனைத்து விவசாயிகளுக்கும், தரமான விதை நெல்லை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு அவர்கள் கூறினர்.

### நேரடி நெல் விதைப்பு விவசாயிகள் மகிழ்ச்சி

ஆர்.கே.பேட்டை: நேரடி நெல் விதைப்பு முறை, குறைந்த செலவில், நிறைவான மகசூல் தருகிறது. என, பயிரிட்ட விவசாயிகள் மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றனர், ஆர்.கே.பேட்டை ஒன்றியம், சகஸ்ரபத்மாபுரம் கிராமத்தில், நேரடி விதை விதைப்பு முறையில், தை பொன்னி பயிரிடப்பட்டு உள்ளது. வழக்கமான நடவு முறையை காட்டிலும், இதில், பயிர்கள் அதிக செழிப்பாக வளர்கின்றன, நாற்றங்காலில் இருந்து நடவு வயலுக்கு மாற்றப்படும் பயிர் அதிக பலத்துடன் காணப்படுவதில்லை.

நேரடி நெல் விதைப்பு முறையில், விதை முளைத்து அங்கேயே வளர்கிறது. பயிர் அதிக துார்களுடன் கிளைத்து வளர்வதால், கதிர்களின் எண்ணிக்கை கூடுதலாக கிடைக்கிறது. இதில், உரம், பயிர் பராமரிப்பு செலவு, நடவு முறையை காட்டிலும் குறைவு. இளம் பயிரை காப்பாற்ற, அதிக உரங்களை இட வேண்டிய தேவை கிடையாது.

துார்கள் அதிகம் என்பதால், களை பறிப்பது மட்டுமே, சற்று சிக்கலான பணியாக உள்ளது. இம்முறையில், ஏக்கருக்கு, 20 மூட்டை வரை நெல் மகசூல் கிடைக்கும் என்கின்றனர் விவசாயிகள்.

### விதை பரிசோதனை செய்யவேளாண் அலுவலர் அறிவுரை

காஞ்சிபுரம்: நிலக்கடலை விதையை பரிசோதனை செய்து கொள்ளலாம் என, விதை பரிசோதனை அலுவலர் தெரிவித்துள்ளார்.ஆடி மற்றும் கார்த்திகை பருவத்திற்கு, நிலக்கடலை பயிர்கள் உகந்தது. இப்பருவத்தில், நிலக்கடலை பயிரிடும் விவசாயிகள், டிஎம்வி-7; டிஎம்வி-13; விஆர்ஐ-3: டிஏஜி-24; ஜெஎல்-24 ஆகிய விதைகளை விதைக்கலாம். முளைப்புத்திறன் உள்ளதா என, பரிசோதனை செய்து விதைக்க வேண்டும். விதை மாதிரியை பஞ்சுப்பேட்டை விதை பரிசோதனை அலுவலரிடம் பரிசோதனை செய்யலாம் என, விதை பரிசோதனை அலுவலர் பெருமாள் தெரிவித்துள்ளார்.

### கம்பு பயிற்சி முகாம் பங்கேற்க அழைப்பு

பெரம்பலூர்: "வாலிகண்டபுரத்திலுள்ள ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், கம்பு மாவிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பு பயிற்சி நடக்க உள்ளது' என, மையத்தின் திட்ட ஒருங்கிணைப்பாளர் வெங்கடேசன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:

மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களுக்கு, ஹேன்ஸ் ரோவர் வேளாண் அறிவியல் மையத்தில், கம்பு மாவிலிருந்து மதிப்பு கூட்டப்பட்ட பொருள்கள் தயாரிப்பது குறித்த இலவச பயிற்சி, நாளை காலை, 10 மணி முதல், மாலை, 3 மணி வரை, நடக்க உள்ளது. ஆர்வமுள்ள சுய உதவிக்குழு உறுப்பினர்கள் பயிற்சியில் பங்கேற்று பயன் பெறலாம்.

பயிற்சியில் கலந்து கொள்ள விரும்புவோர், தங்களின் பெயர் மற்றும் முகவரியை நேரில் அல்லது, 04328-293251, 293592, 76676-58882 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு, முன்பதிவு செய்து கொள்ளலாம்.

### மழை குறைவால், மஞ்சள் சாகுபடி குறைவு பொங்கலுக்கு விலை அதிகரிக்கும் அபாயம்

கரூர்: கரூர் மாவட்டத்தில் பருவமழை தவறியதால், மஞ்சள் விளைச்சல் வெகுவாக குறைந்துள்ளது. இதனால், பொங்கல் திருவிழாவின் போது மஞ்சக் கொத்துக்கு கடும் கிராக்கி மற்றும் விலை உயர்வு இருக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழக அளவில் ஈரோடு மாவட்டத்தில் அதிகளவில் மஞ்சள் பயிரிடப்படுகிறது. இதை தவிர, சேலம், நாமக்கல், திருவண்ணாமலை, வேலூர், தருமபுரி உள்ளிட்ட மாவட்டங்களிலும் மஞ்சள் பயிரிடப்படுகிறது. கரூர் மாவட்டத்தில் ஓரளவுக்கு மஞ்சள் விளைச்சல் செய்யப்படுகிறது.

கடந்தாண்டு மற்றும் நடப்பாண்டுகளில் தென் மேற்கு பருவமழை மற்றும் வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், மஞ்சள் விளைச்சல் பரப்பளவு வெகுவாக குறைந்துள்ளது.

கடந்த 2011 ம் ஆண்டு துவக்கத்தில் ஒரு குவிண்டால் மஞ்சள் 13 ஆயிரம் ரூபாய்

வரை விற்றது. இதனால், கடந்த இரண்டாண்டாக விவசாயிகள் வழக்கத்துக்கு மாறாக, மஞ்சளை அதிகளவில் பயிரிட்டு வருகின்றனர். ஆனால், பருவமழை தவறியால், மஞ்சள் விளைச்சல் குறைந்துள்ளதால், நடப்பாண்டு இறுதியில் மஞ்சள் விலை அதிகரிக்கும், என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால், பொங்கல் பண்டிகைக்கு மஞ்சளை அறுவடை செய்யாமல் விவசாயிகள் காத்திருப்பார்கள் என தெரிகிறது. பொங்கல் பண்டிகைக்கு ஒன்றரை மாதங்கள் உள்ள நிலையில் மஞ்சள் கொத்துக்கு கடும் கிராக்கி ஏற்பட வாய்ப்புண்டு

கரூர் மாவட்டத்தில் மஞ்சள் பயிரிட்டுள்ள விவசாயிகள் கூறியதாவது:

கடந்தாண்டு அதிக விளைச்சல் காரணமாக, ஏற்கனவே மஞ்சளுக்கு விலை குறைந்தது. பருவமழை குறைவால், தற்போது விளைச்சல் குறைந்துள்ளது. இதனால், நடப்பாண்டு இறுதியில் தட்டுப்பாடு காரணமாக மஞ்சளுக்கு கூடுதல் விலை கிடைக்க வாய்ப்புண்டு. விளைச்சல் குறைவை, விலை உயர்வு மூலம் சரிகட்ட முடியும்.

பொங்கல் பண்டிகையின் போது மஞ்சளை அறுடை செய்தால், கொத்து ஒன்றுக்கு 30 ரூபாய் முதல் 50 ரூபாய் வரை மட்டுமே விற்பனை செய்ய முடியும். இதனால், பெரும்பாலான விவசாயிகள் மஞ்சள் அறுவடை செய்வார்களா? என்பது சந்தேகம் தான்.

இவ்வாறு விவசாயிகள் கூறினர்.

### விதை விற்பனையாளர்கள் உரிமத்தை புதுப்பிக்க அறிவுரை

ஊட்டி : "விதை விற்பனையாளர்கள், தங்கள் உரிமத்தை புதுப்பித்து கொள்ள வேண்டும்' என, அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் பொன்னுசாமி நடேசன் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

நீலகிரி மாவட்டத்தில் உள்ள அனைத்து விதை விற்பனையாளர்களும், தங்கள் விதை விற்பனை உரிமத்தை, காலவதி தேதிக்கு முன்பே புதுப்பித்து கொள்ள வேண்டும்; விதை வணிக உரிமம், 3 ஆண்டுகளுக்கு செல்லத்தக்கது.

உரிமம் இல்லாமல், புதுப்பிக்காமல் விதை விற்பனை செய்தால், விதை கட்டுப்பாடு ஆணை 1983ன் கீழ், சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். விதை விற்பனை செய்யும் போது, விற்பனை ரசீதில், விதை வாங்கும் விவசாயிகளின் பெயர், ரகம், முழு முகவரி, பயிர், ரகத்தின் பெயர், குவியல் எண், காலாவதி தேதி, விவசாயி மற்றும் விற்பனையாளரின் கையொப்பம் இருக்க வேண்டும். மாதந்தோறும் பிரதி 5ம் தேதிக்குள், விதை இருப்பு மற்றும் விற்பனை விபரத்தை உரிய படிவத்தில், கோவை விதை ஆய்வு துணை இயக்குனர் அலுவலகத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். விற்பனையாளர்கள், விதை மாதிரிகளை விதை பரிசோதனை நிலையத்திற்கு அனுப்பி தரத்தை உறுதிப்படுத்தி கொள்ள வேண்டும்; காலாவதியான விதைகளை இருப்பு வைப்பது, விற்பனை செய்வது சட்டப்படி குற்றம்.இவ்வாறு, பொன்னுசாமி நடேசன் கூறியுள்ளார்.

### ஒரு கிலோ சின்ன வெங்காயம் ரூ.50 ஐந்து மாதத்துக்கு பின் விலை சரிவு

ஈரோடு: ஈரோடு மார்க்கெட் கடைகளில், ஐந்து மாதங்களுக்கு பின், சின்னவெங்காயம், 20 ரூபாய் குறைந்து, கிலோ, 50 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

ஈரோடு நேதாஜி காய்கறி மார்க்கெட்டில் உள்ள மொத்த மற்றும் சில்லறை விற்பனை கடைகள் மற்றும் பழமுதிர்சோலை, உழவர் சந்தையிலும், கடந்த ஓராண்டுக்கு மேலாக, வெங்காயம், தக்காளி, கத்திரிக்காய், காரட், பீன்ஸ், அவரைக்காய் ஆகியவை, கிலோ, 100 ரூபாய் வரைக்கூட விற்பனையானது. முக்கியமாக தண்ணீரின்றி சின்ன வெங்காய உற்பத்தி முற்றிலுமாக குறைந்ததால், கிலோ, 80 முதல், 100 ரூபாய் வரை விற்கப்பட்டது.

வெங்காயத்துக்கு மாற்றாக, கோஸ் பயன்படுத்தியதால், அதன் விலையும் உயர்ந்தது. கடந்த, ஐந்து மாதங்களாக சின்ன வெங்காயம் விலை, 80 ரூபாயாக இருந்து வந்தது. இந்நிலையில், இரண்டு நாளாக, சின்ன வெங்காய விலை கிலோவுக்கு, 20 ரூபாய் குறைந்து, 50 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

பெரிய வெங்காயம் கிலோ, 35 முதல், 40 ரூபாய்க்கு விற்கப்படுகிறது.

இதுகுறித்து காய்கறி மொத்த வியாபாரி ஹக்கிம் கூறியதாவது: கார்த்திகை மாத துவக்கியதாலும், தை பிறப்பு வரை முகூர்த்தங்கள், பண்டிகைகள் இல்லை என்பதாலும், மழையாலும், காய்கறி வரத்தும் அதிகரித்துள்ளது. சபரி மலை சீஸன் இருந்தபோதிலும் காய்கறி விலை குறைந்துள்ளது.

சின்னவெங்காயம் கிலோ, 50 ரூபாய், (உலர்ந்தது) 60 ரூபாய், பெரிய வெங்காயம் கிலோ, 30 முதல், 45 ரூபாய், கோஸ் கிலோ, 12, காரட் (ஊட்டி), 20, பெங்களூரு, 48, பீன்ஸ் (ஊட்டி) கிலோ, 20, பீட்ரூட், 20, டர்னிப், நூல்கோல், 16, முள்ளங்கி, 14, இஞ்சி, 60, ப.மிளகாய், 20 ரூபாய்க்கு கிடைக்கிறது.

ஒரு வாரத்தில் தக்காளி கிலோவுக்கு, 15 ரூபாய் குறைந்து, 30 முதல், 35 ரூபாய் வரை, கத்தரிக்காய், 14 ரூபாய், அவரை, 15 ரூபாய், வெண்டைக்காய், 15 ரூபாய், பாகற்காய், 14 ரூபாய், பீர்க்கை, 20 ரூபாய், மல்லி தழை கட்டு, 6 ரூபாய், புதினா கட்டு, 3 ரூபாய், கறிவேப்பிலை கிலோ, 25 ரூபாய்க்கு மொத்த விலையில் விற்பனை செய்யப்படுகிறது.

சில்லறை விலையில் கிலோவுக்கு, 10 ரூபாய் வரை கூடுதலாக விற்பனை செய்யப்படுகிறது. இனி வரும், மூன்று மாதத்திற்கு ஆந்திரா காய்கறி வரத்து அதிகரித்து மேலும் விலை குறையும், எனக்கூறினார்.

### கடைமடையில் மழை விவசாயிகள் மகிழ்ச்சி

திருத்துறைப்பூண்டி: காவிரி டெல்டா கடைமடை பகுதியான, திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி பகுதியில் நேற்று முன்தினம் முதல் பெய்ய துவங்கிய மழையால், விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தாலுகா, காவிரி கடைமடை பகுதியாக விளங்குகிறது. இப்பகுதியில், ஒன்றரை லட்சத்துக்கும் மேற்பட்ட ஏக்கரில் சம்பா சாகுபடி நேரடி நெல் விதைப்பை விவசாயிகள் மேற்கொண்டுள்ளனர். ஆனால், கடந்த, 20 நாட்களுக்கு முன் பிற பகுதிகளில் பெய்த வடகிழக்கு பருவமழை,

இப்பகுதியில் பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் கவலையடைந்தனர். திருத்துறைப்பூண்டி கடைமடை பகுதிகளில் நேற்று முன்தினம் அதிகாலை, 3 மணி முதல், மழை பெய்து வருகிறது. பயிரிடப்பட்ட பயிர்களில் நெற்கதிர்கள் சூல் கட்டி, கதிர்கள் வெளிவர உள்ள நிலையில் மழை பெய்ததால், நடப்பாண்டு நெல் உற்பத்தி அதிகரிக்க வாய்ப்புள்ளது என, விவசாயிகள் மகிழ்ச்சியில் ஆழ்ந்துள்ளனர்.

### 3 மணிநேர மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

வேதாரண்யம்: தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை துவங்கினாலும், வேதாரண்யம் பகுதியில் இதுவரை போதிய மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் வேதனையடைந்தனர். இப்பகுதியில், 10 ஆயிரம் ஹெக்டரில் சாகுபடி செய்த சம்பா பயிர்கள் கருகும் நிலை இருந்தன. இந்நிலையில் வேதாரண்யம் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில் நேற்று முன்தினம் மாலை, 5 மணி முதல், நல்ல மழை பெய்து வருகிறது.

இதையடுத்து வேதாரண்யம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை, 5 மணி முதல், நேற்று காலை, எட்டு மணி வரை, 18.2 மி.மீ., மழை பெய்துள்ளது. இத்தகைய மழையால், வேதை பகுதி விவசாயிகள் பெரும் மகிழ்ச்சியடைந்துள்ளனர். மேலும் இம்மழையால் தண்ணீரின்றி வாடிய சவுக்கு, முந்திரி, மா உள்ளிட்ட மரங்களும் பிழைத்துக் கொள்ளும் என, விவசாயிகள் கூறினர்.

### மாவட்டத்தில் மழையில்லாததால் 220 கண்மாய்கள் நிரம்பவில்லை: தொடரும் வறட்சியால் மானாவாரி விவசாயிகள் பாதிப்பு

தேனி : தேனி மாவட்டத்தில் நடப்பு ஆண்டு தென்மேற்கு, வடகிழக்கு பருவமழைகள் ஏமாற்றியதால், 220 கண்மாய்கள் வறண்டு கிடக்கின்றன. மானாவாரி பயிர்கள் வாடுவதால் விவசாயிகள் தவித்து வருகின்றனர்.

தேனி மாவட்டத்தில், கடந்த 2010ம் ஆண்டு நல்ல முறையில் மழை பெய்தது. மாவட்டத்தில் உள்ள அணைகள், கண்மாய்கள் முழுமையாக நிரம்பின. நிலத்தடி நீர் மட்டமும் உயர்ந்தது. விவசாயம் செழிப்பாக இருந்தது. 2011 மற்றும் 2012ம்

ஆண்டுகளில் மழை பெய்யவில்லை. நடப்பு ஆண்டு மழை நல்ல முறையில் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

கர்நாடகா, ஆந்திரா, கேரளாவில் அதிக மழை பெய்தது. தமிழகத்தில் மழை குறைவாக பெய்தது. குறிப்பாக, கேரளாவில் பெய்த மழையால் பெரியாறு அணை ஓரளவு நிரம்பி, தேனி மாவட்டத்தில் முதல் போக நெல் சாகுபடி எடுக்க முடிந்தது. இரண்டாம் போக நெல் நடவு செய்ய வேண்டாம், என விவசாயிகளை பொதுப்பணித்துறையினர் அறிவுறுத்தி வருகின்றனர்.

மாவட்டத்தில் பெரியாறு அணை நீர் மூலம் நிரம்பும் கண்மாய்கள் தவிர, மழைநீர் மூலம் நிரம்பும் 220 கண்மாய்களில் ஒன்று கூட இந்த ஆண்டு நிரம்பவில்லை. குறிப்பாக கடந்த 15 நாளில் மூன்று முறை புயல் சின்னம் உருவாகியும், தேனி மாவட்டத்தில் வெயில் அதிகம் இருந்தது. புயலால் மழை பெய்யும் என வானிலை ஆய்வு மையம் அறிவித்த நாட்

களில் தேனி மாவட்டத்தில் மேகமூட்டம் கூட இல்லை.

தென்மேற்கு பருவமழை, வடகிழக்கு பருவமழை இரண்டுமே மாவட்டத்தில் பொய்த்து விட்டது. மேற்கு தொடர்ச்சி மழையில் பெய்த மழையால் சோத்துப்பாறை, அணை மட்டும் நிரம்பி விட்டது. மற்ற அணைகள் அனைத்தும் பற்றாக்குறை நிலையிலேயே உள்ளன. ஆண்டிபட்டி, தேனி, போடி, பெரியகுளம் ஒன்றியங்களில் கடும் வறட்சி நிலவுகிறது.மக்கள் குடிநீருக்கே தவித்து வருகின்றனர்.

இப்பகுதிகளில் மானாவாரி சாகுபடி பயிர்கள் வாடும் நிலையில் இருப்பதால் விவசாயிகள் செய்வதறியாது தவித்து வருகின்றனர்.இன்னும் 20 நாளில் பருவமழை சீசன் முடிந்து விடும். வழக்கமாக செப், அக், நவ, டிச., மாதங்களில் வைகையில் நீர் வரத்து இருக்கும்.

தொடர்ந்து மூன்றாவது ஆண்டாக போதிய மழை பெய்யாததால், விவசாயிகள் வாழ்க்கை நெருக்கடிக்கு உள்ளாகி உள்ளது. மாவட்டத்தில் ஆண்டிபட்டி, பெரியகுளம், போடி உள்ளிட்ட பகுதியில் விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளது.

## உரம், பூச்சி மருந்துகள் கொள்முதலில் கவனம் தேவை

கம்பம் : உரம், பூச்சி மருந்துகள் கொள்முதல் செய்யும் போது, சம்பந்தப்பட்ட நிறுவனம் பற்றிய முழு தகவல்களை தெரிந்து கொண்டு, கொள்முதல் செய்ய வேண்டும், என்று உரக்கடைகளுக்கு,தேனி மாவட்ட தரக்கட்டுப்பாடு அதிகாரி ஜெயப்பாண்டியன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

தமிழ்நாட்டில், விவசாயம் மற்றும் தோட்டக்கலை மாவட்டம் என்ற அந்தஸ்தை தேனி பெற்றுள்ளது. நெல், வாழை, திராட்சை, மா, கொய்யா, தென்னை என சாகுபடி செய்யப்படுகின்றன.விவசாயிகள் பயன்படுத்தும் உரம் மற்றும் பூச்சி மருந்துகள், கடைக்காரரை நம்பியே வாங்கி பயன்படுத்துகின்றனர். எனவே கடைக்காரர்கள், உரம் மற்றும் பூச்சி மருந்துகளை கொள்முதல் செய்யும் போது, கூடுதல் கவனத்துடன் இருக்க வேண்டும். சபந்தப்பட்ட நிறுவனம், அரசின் அனுமதி பெற்றுள்ளதா, தரச்சான்று பெற்றுள்ளதா, காலவதியாகியுள்ளதா, முகவரி உள்ளிட்ட பல்வேறு விஷயங்களை தெரிந்து கொள்ள வேண்டும். குறிப்பாக "பயோ' மருந்துகள் வாங்கும் போது தீவிர கண்காணிப்புதேவை. அதிலும் வேப்பம் புண்ணாக்கு கொள்முதல் செய்யும் போது, சம்பந்தப்பட்ட நிறுவனம் பற்றி தீர விசாரிக்க வேண்டும். உரம் மற்றும் பூச்சி மருந்துகள், பயோ மருந்துகள், வேப்பம் புண்ணாக்கு தயாரிக்கும் நிறுவனங்கள் பற்றி விபரம் தேவைப்பட்டால், என்னுடன் 94423-33999 என்ற மொபைல் எண்ணில் தொடர்பு கொள்ளலாம். சம்பந்தப்பட்ட நிறுவனம் பற்றிய விபரங்கள் தெரிவிக்கப்படும். மேலும் உரம் மற்றும் பூச்சி மருந்துகள் விற்பனை செய்யும் போது, தேவையான ஆவணங்களையும் வைத்திருக்க வேண்டும். தவறும் பட்சத்தில் நடவடிக்கை எடுக்கப்படும், என்றார்.

## மா மகசூலை பாதிக்கும் தத்துப்பூச்சிகள் :விவசாயிகளுக்கு ஆலோசனை

பெரியகுளம் : மா மகசூலை பாதிக்கும் தத்துப்பூச்சிகளை கட்டுப்படுத்த விவசாயிகளுக்கு, தோட்டக்கலை கல்லூரி நிர்வாகம் ஆலோசனை வழங்கியுள்ளது. பெரியகுளம் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் மா விவ

சாயம் செய்யப்பட்டு வருகிறது. நவ, டிச, ஜன., மாதங்களில் மா பூக்கள் பூக்கும். மார்ச்சில் மா பிஞ்சாகவும், ஏப்ரல் மாதம் மாங்காய் வரும். மா மரங்களில் சில பகுதிகளில் தத்துப்பூச்சிகள் அதிகளவில் உள்ளது. இவைகளை கட்டுப் படுத்த பெரியகுளம் தோட்டக்கலைக் கல்லூரி நிர்வாகம் ஆலோசனை கூறியுள்ளது.

மா மரத்தை தாக்கும் சாறு உறிஞ்சும் பூச்சிகளில் முக்கியமானது மா தத்துப்பூச்சிகளாகும். "இடியோஸ்கோபஸ் நிவ்யோஸ்பார்சஸ்', "அமீர்டோஸ் அட்கின்சோனி' ஆகியவை தத்துப்பூச்சிகளின் வகைகளாகும். பூச்சிகள் தாக்கத்தால் பூங்கொத்தில் உள்ள பூ மொக்குகள் கருகி உதிர்ந்து விடும். பூங்கொத்துகள் வாடி காணப்படும். மா இலைகளில் தேன் போன்ற கழிவு திரவமும், கரும்பூஞ்சாணமும் தென்படும். பூச்சிகள் மரங்களில் அதிகளவில் இருந்தால் மா மகசூல் பாதிக்கும். கட்டுப்படுத்தும் முறைகள்: பூக்கள் மலரும் சமயத்திற்கு இரண்டு வாரங்கள் முன்பாக பயிர்பாதுகாப்பினைத் தொடங்க வேண்டும். சிறிய மற்றும் பெரிய கிளைகளின் பட்டைகளில் பூச்சிமருந்து படுமாறு தெளிக்க வேண்டும். பூச்சிகளை நன்கு கலந்த பின்பு டீபால் ஒட்டு திரவம் கலந்து தெளிக்க வேண்டும். அடர்ந்து வளர்ந்துள்ள மரக்கிளைகளை கவாத்து செய்யவேண்டும்.

தோப்பில் களைகளை நீக்கி சுத்தமாக வைத்து, தத்துப்பூச்சிகளின் இனப்பெருக்கத்தைக் கட்டுப் படுத்தலாம்.

மா பூக்கும் சமயத்தில் விளக்குப் பொறி எக்டருக்கு 1 என்ற எண்ணிக்கையில் வைத்து தாய் பூச்சிகளை கவர்ந்து அழிக்கலாம். அசிபேட் 1 கிராம் ஒரு லிட்டர் நீரில் அல்லது பாசலோன் 2 மில்லி லிட்டர் ஒரு மில்லி லிட்டர் நீரில் கலந்து 10 நாட்டள் இடைவெளியில் மூன்று முறையாக மா பூ பூக்கும் தருணத்தில் தெளிக்க வேண்டும்.

மா வடு வரும் நேரத்தில் கார்பரில் 2 கிராம் ஒரு லிட்டர் நீரில் அல்லது பென்தியான் 1 மி.லி கரைத்து தெளித்தும் தத்து பூச்சிகளை கட்டுப் படுத்தலாம், என தோட்ட கலைத்துறை ஆலோசனை வழங்கியுள்ளது.

## விலையில்லா ஆடுகளை கண்காணிக்க உத்தரவு

தேவதானப்பட்டி : ஜெயமங்கலத்தில், விலையில்லா ஆடுகளை கண்காணிக்க குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன.

பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலம் ஊராட்சியில் 114 பபயனாளிகளுக்கு விலையில்லா ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. இவ்வாறு, வழங்கப்பட்ட 50க்கும் மேற்பட்ட ஆடுகள் இறந்து விட்டன. இதற்கான காரணம் குறித்து, கால்நடைத்துறை அதிகாரிகள் விசாரித்து வருகின்றனர். இந்நிலையில், ஆடுகள் தொடர்ந்த இறப்பதை தடுப்பதற்காக தொடர் கண்காணிப்பு செய்ய மாவட்ட நிர்வாகம் உத்தரவிட்டுள்ளது.

இதற்காக,தேவதானப்பட்டி கால்நடை டாக்டர்கள் விஜயக்குமார், சுரேஷ் தலைமையில் தனித்தனியாக குழு அமைக்கப்பட்டுள்ளது. இக்குழுவினர் நாள்தோறும் வீடு,வீடாக சென்று விலையில்லா ஆடுகளை கண்காணித்து வருகின்றனர். நோய் தாக்குவதற்கான அறிகுறிகள் காணப்பட்டால், தடுப்பு ஊசி போடுதல் மற்றும் நோய் தாக்குதலில் இருந்து ஆடுகளை காப்பது எப்படி என்று, பயனாளிகளுக்கு விழிப்புணர்வு அளிக்கப்படுகிறது.

## உத்தரகோசமங்கையில் இறவை தண்ணீர் மூலம் நெல் சாகுபடி

உத்தரகோசமங்கை:உத்தரகோசமங்கை பகுதியில் இறவை தண்ணீர் சாகுபடியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

திருப்புல்லாணி சுற்றுப்பகுதிகளில் 5600 எக்டேர் நெல் சாகுபடியில், 14 ஆயிரம் விவசாய குடும்பங்கள் ஈடுபட்டுள்ளன. உத்தரகோசமங்கை, மேலச்சீத்தை, கருங்குளம், பனைகுளம், நல்லாங்கடி உள்ளிட்ட பகுதிகளில் உயர்ரகமான ஆடுதுறை 45, சாகுபடி செய்த விவசாயிகளுக்கு மழை நீர் கைகொடுக்கவில்லை. இங்குள்ள கண்மாயில் தேங்கிய தண்ணீரை மோட்டார் வைத்து அள்ள விவசாயிகளுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால் வயல் ஓரங்களில் வரப்பு வெட்டி, அதில் வரும் தண்ணீரை இறவை மூலம் பாய்ச்சுகின்றனர்.

விவசாயி ஆறுமுகம் கூறுகையில்,

""இரண்டு ஆண்டுகளாக போதிய மழையில்லை. கண்மாயில் நிரம்பிய தண்ணீரை, இறைவை மூலம் நெல் விளைச்சலுக்கு பயன்படுத்துகிறோம். நெல் அறுவடைக்கு

பின் மிளகாய், பருத்தி சாகுபடியும் பாதித்துள்ளது," என்றார்.

விவசாய உதவி இயக்குனர் முகமது அப்துல் நசீர் கூறியதாவது: ஊடு பயிர் நடவுக்கு ஏற்ற நேரமிது. நெல் மணிகள் திரட்சிக்கு, ஏக்கருக்கு 10 கிலோ ஜிங்க் சல்பேட்டை மணலுடன் கலந்து தெளிக்க வேண்டும். கருகிய நெல் சாகுபடியில் போதிய மகசூல் வருவதில்லை. விளை
நிலங்களில் மோட்டார் மூலம் தண்ணீர் பயன்படுத்த அனுமதியில்லாததால், இறவை தண்ணீரில் விவசாயம்
நடக்கிறது, என்றார்.

## மறவமங்கலத்தில் தானிய கிடங்கு அமைக்க ரூ.10 கோடி ஒதுக்கப்படும் மத்திய அமைச்சர் பேச்சு

காளையார்கோவில்:மறவமங்கலத்தில், ரூ.15 லட்சம் செலவில் கட்டிய, புதிய பஸ் ஸ்டாண்டை, மத்திய இணை அமைச்சர் சுதர்சன நாச்சியப்பன் திறந்து வைத்தார். விழாவிற்கு, ஊராட்சி தலைவர் காளீஸ்வரி தலைமை வகித்தார்.

அமைச்சர் சுதர்சனநாச்சியப்பன், திறந்து வைத்து பேசுகையில், கிராமங்களில் விவசாயிகளும், மகளிரும் பொருளாதார வளர்ச்சி காண, மத்திய அரசு பல்வேறு வளர்ச்சி திட்டங்களை செயல்படுத்துகிறது. மத்திய அரசின் சிறப்பு திட்டங்கள் அதிகம் இருந்தும், அடித்தட்டு மக்களை, அவை சென்று சேரவில்லை.

மதுரை போன்ற பெருநகரங்களில், ரூ.40 கோடியில், தானிய கிடங்கு உருவாகி வருகிறது. உங்கள் தேவையை முழுமையாக அறிந்தவன் நான். நீங்கள் கோரிக்கைகளை வைக்காமலேயே செய்து காட்டுவேன். விவசாயிகள், உற்பத்தி செய்யும் தானியங்களை பதப்படுத்தி, ஏற்றுமதி செய்வதன் மூலம், கூடுதல் லாபம்,வேலைவாய்ப்பு கிடைக்கும்.

மறவமங்கலத்தில், இதற்கான இடத்தை தேர்வு செய்து தந்தால், தானிய கிடங்கு அமைக்க ரூ.10 கோடி ஒதுக்கப்படும்.

அரசு மேல்நிலைப்பள்ளியில், சுற்றுச்சுவர் கட்ட, அடுத்த நிதி ஆண்டில், ரூ.10

லட்சம் தரப்படும், என்றார். மனித உரிமை கழக துணை தலைவர் ஜெயசிம்மன், ஒன்றிய கவுன்சிலர் சரவணன் பங்கேற்றனர்.

## சின்னமுட்டம் மீன்பிடி துறைமுகம் 74 கோடி செலவில் விரிவாக்க பணிகள் தீவிரம் கூடுதலாக 150 படகுகள் நிறுத்தலாம்

கன்னியாகுமரி: கன்னியாகுமரியை அடுத்த சின்ன முட்டம் மீன்பிடி துறைமுகம் விரிவாக்க பணிகள் வேகமாக நடந்து வருகிறது. இந்த பணி நிறைவடையும் போது கூடுதலாக 150 படகுகள் நிறுத்த முடியும்.

கன்னியாகுமரி, சின்ன முட்டம் மீன்பிடித் துறைமுகம் கடந்த 1984 ஆம் ஆண்டு திட்டமிடப்பட்ட போது, 60 இயந்திர படகுகள் மற்றும் 100 நாட்டு படகுகள் ஆகியன மட்டுமே இங்கிருந்து மீன்பிடித்தொழில் செய்யும் வகையில் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் 1994 வேலை முடிக்கப்பட்ட போது 143 இயந்திர படகுகள், 166 நாட்டு படகுகள் மற்றும் 15 பைபர் இழை படகுகள் தங்கி தொழில் செய்யும் அளவிற்கு வசதிகள் இருந்தன. தற்போது 308 இயந்திர படகுகள், 115 பைபர் இழைப் படகுகள் மற்றும் 15 நாட்டு படகுகள் இந்த துறைமுகத்தை தங்கு தளமாக கொண்டு மீன்பிடி தொழில் செய்து வருகின்றன. 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமியில் துறைமுகம் மோசமாக சேதமடைந்த பின்னர், பல்வேறு ஆய்வுகள் நடத்திய மாநில அரசு துறைமுகத்தில் விரிவாக்க பணிகளை மேற்கொள்ள முடிவு செய்தது. தற்போதுள்ள கிழக்கு பிரேக்வாட்டர் பகுதியில் 7.35 கோடி ரூபாய் செலவில் தடுப்பு சுவர் அமைத்து நீட்டிக்க முடிவு செய்யப்பட்டு இதற்கான பணிகள் சில மாதங்களுக்கு முன்பு துவங்கியது. மற்றும் மேற்கு பக்கத்தில் உருவாக்கப்பட்ட புதிய அணைக்கரை பகுதியில். ஒரு விரிவாக்கம் செய்யவும் தீர்மானிக்கப்பட்டது. தற்போது இப்பணிகள் முழு வீச்சில் நடைபெற்று வருகிறது. இப்பணிகள் நிறைவடையும் பட்சத்தில் இத்துறைமுகம் மூலம் மேலும் 1500 மீனவர்கள் பயனடையவும், 150 மேலும் இயந்திர படகுகள் நிறுத்தவும் முடியும், என அதிகாரிகள் கூறினர்.

## தூத்துக்குடி மாவட்டத்தில் பரவுகிறதா கோமாரி நோய்..! மாடு வளர்க்கும் விவசாயிகள்,பொதுமக்கள் பீதி முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டுகோள்

சாயர்புரம்:தூத்துக்குடி மாவட்டத்தில் மாடுகளை தாக்கும் கோமாரி நோய் பரவி வருவதாக வந்த தகவலை அடுத்து மாடு வளர்ப்போர் மற்றும் பொதுமக்கள் பீதி அடைந்துள்ளனர். உடனடியாக கால்நடைத்துறை கோமாரி நோய்குறித்தும் நோய் வராமல் தடுப்பதற்கும் முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோமாரிநோய்:

கோமாரி நோய் மாடுகளைத் தாக்கும் கொடிய நச்சுயிரி நோயாகும்.இந்நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளின் வாய், கால் மற்றும் மடியில் கொப்புளங்கள் தோன்றும்.பால் கறக்கும் கறவை மாடுகளில் திடீரென பால் உற்பத்தி குறைவு, தாயிடம் பால் குடிக்கும் கன்றுகள் இறந்து விடுதல், சினை மாடுகளில் கன்று வீசுதல், மற்றும் சினைப் பிடிக்காதிருத்தல் போன்றவையும் இந்நோயின் அறிகுறிகளாகும்.நோய்க்கான காரணங்கள்இந்நோய் பிக்கோர்னா விரிடே எனும் குடும்பத்தைச் சார்ந்த ஆப்தோ வைரஸ் எனும் நச்சுயிரியால் எற்படுகிறது.இந்நோய்க் கிருமியில் ஏழு சீரோ வகைகள் உள்ளன. அவை, ஓ, ஏ, சி, ஏசியா 1, சேட் 1, சேட் 2 மற்றும் சேட் 3 ஆகும்.இந்த வைரஸ் அமில காரத்தன்மை 6-9 ஆக இருக்கும்போதும், வெப்பநிலை 56 டிகிரி செல்சியஸ்க்கு அதிகமாக இருக்கும்போதும், அழிக்கப்பட்டு விடும். ஆனால் இந்நோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளின் பால் அல்லது உமிழ் நீர் போன்றவற்றில் நீண்ட நேரம் இந்த நச்சுயிரி உயிரோடு இருக்கும். நோய்க்கான அறிகுறிகள்அதிக காய்ச்சல் (104-106 டிகிரி பாரன்ஹீட்) மற்றும் பசியின்மைநோயினால் பாதிக்கப்பட்ட மாடுகளின் வாயிலிருந்து உமிழ் நீர் நூல் போல தொங்கிக்கொண்டு இருத்தல் வலியின் காரணமாக, பாதிக்கப்பட்ட மாடுகள் காலை உதறிக் கொண்டு இருத்தல், பிறகு நொண்டி நடத்தல் போன்ற அறிகுறிகள் இருந்தால் கோமாரி நோய் தாக்கியிருக்ககூடும். உடனடியாக அருகில் உள்ள கால்நடைஆஸ்பத்திரிக்கு சென்று உரிய சிகிச்சையளிக்கவேண்டும். கவனிக்காமல் மாடுகளின் உயிருக்கே

ஆபத்தாகிவிடும்.தூத்துக்குடி மாவட்டத்தில் பரவுகிறதா.!
சாயர்புரம் மற்றும் புதுக்கோட்டை அருகேயுள்ள அல்லிகுளம் மற்றம் ஆண்டாள் நகர் பகுதியைச் சேர்ந்த விவசாயிகளின் மாடுகளுக்கு கோமாரி நோயின் அறிகுறிகள் இருப்பதாக கூறப்படுகிறது. இதில் ஒரு மாடு இறந்துவிட்டதாகவும் கூறப்படுகிறது.இதனால் இந்தப்பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் கடும் பீதி அடைந்துள்ளனர். ஏற்கனவே எட்டயபுரம் பகுதிகளில் மாடுகளுக்கு மழைக்கால தொற்றுநோய்கள் ஏற்பட்டு அவதிப்பட்டு வருகின்றன. இந்நிலையில் கோமாரிநோயும் மாவ ட்டத்தில் பரவி விட்டால் கஷடபட்டு வளர்த்த மாடுகள் இறந்துவிடுமே என்று மாடுகள் வளர்ப்போர் கவலையடைந்துள்ளனர். எனவே மாவட்ட நிர்வாகம் மற்றும் கால்நடைத்துறை சார்பில் கிராமங்கள் தோறும் சிறப்பு முகாம்கள் அமைத்து கோமாரி நோய் இருந்தால் கட்டுக்குள் கொண்டுவர வேண்டும் என்று விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.மக்களுக்கும் பரவுமோ... மாட்டுப்பால் குடிக்க பீதிகோமாரி நோய் பாதித்த மாடுகளின் பாலை குடித்தால் நோய் தொற்று ஏற்படும் என்று கூறப்படுகிறது. இதுகுறித்து கால்நடைத்துறை மருத்துவர்களிடம் கேட்டபோது அவர்கள் கூறியதாவது.
பொதுவாக மாட்டின் பாலை நன்றாக காய்ச்சி, கொதிக்கவைத்துதான் குடிக்கவேண்டும். அப்படியிருக்கையில் கோமாரி நோய் தாக்குதலுக்கு உள்ளான மாட்டின் பாலை குடித்தால் நோய் தொற்று ஏற்பட வாய்ப்புள்ளது. ஆனால் பாலை72 டிகிரி செல்சியஸ் வெப்பநிலையில் நன்றாக 15 நொடிகள் திக்கவிடும் போது இந்த வைரஸ் அழிந்து விடுகிறது.ஆகையால் தைரியமாக குடிக்கலாம். ஒன்றும் செய்யாது.

## நெல்லை மாவட்டத்தில் கனமழை!

திருநெல்வேலி:நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் நேற்று காலை வரை பரவலாக மழை பெய்தது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.வடகிழக்கு பருவமழை தீவிரமடைந்துள்ள நிலையில் அவ்வப்போது காற்றழுத்த தாழ்வு நிலையும் உருவாகி வருகிறது. இதனால் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக மழை பெய்து வருகிறது. நெல்லையில் நேற்று நள்ளிரவு முதல் நேற்று காலை வரை கனமழை பெய்தது. இருப்பினும் சில இடங்களில் லேசான சாரல் மழையே பெய்தது. நெல்லையில் குளிர்ச்சியான சீதோஷ்ண நிலை ஏற்பட்டுள்ளதால் மக்கள் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

## 25.11.2013

### விரி டெல்டா மாவட்டங்களில் கனமழை



சென்னை: வங்க கடலில் உருவான குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை காரணமாக காவிரி டெல்டா மாவட்டங்களில் கடந்த வாரத்தில் 3 நாள் பரவலாக மழை பெய்தது. குறிப்பாக கடந்த 16ம் தேதி பகல் முழுவதும் விடாமல் கொட்டியது. அதன்பின் மழை ஓய்ந்து, பகலில் வெயில் சுட்டெரித்தது. இரவில் பனிப்பொழிவு அதிகமாக இருந்தது.இந்நிலையில் டெல்டா மாவட்டங்களில் நேற்று முதல் மீண்டும் மழை துவங்கி உள்ளது. நாகையில் நேற்று காலை 5 மணி முதல் 8 மணி வரை பலமாக மழை கொட்டியது. அதன்பின் தூறிக்கொண்டே இருந்தது. அதேபோல் வேதாரண்யம், சீர்காழி, மயிலாடுதுறை, பூம்புகார் பகுதிகளிலும் மழை தூறிக்கொண்டே இருந்தது. திருவாரூர், தஞ்சை மாவட்டங்களிலும் காலை முதல் பரவலாக மிதமான மழை பெய்தது. திருச்சியில் காலையில் இருந்தே சூரியன் தென்படவில்லை. வானம் மேகமூட்டத்துடன் இருந்தது. பெரம்பலூர் மாவட்டத்தில் காலை 2 மணி நேரம் லேசாக மழை பொழிந்தது.

பின்னர் வானம் மேகமூட்டத்துடன் இருந்தது.இந்நிலையில் வங்கக்கடலில் அந்தமான் அருகே குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை தற்போது உருவாகி உள்ளது. தொலைதூரத் தில் குறைந்த காற்றழுத்த தாழ்வு நிலை உருவாகி இருப்பதை உணர்த்தும் வகையில் நாகை துறைமுக அலுவலகத்தில் நேற்று காலை முதலாம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட் டிருந்தது. பின்னர் மதியம் 2ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது. முதலாம் கடற்கரை சாலை உள்ளிட்ட இடங்களில் மழைநீர் குளம்போல் தேங்கி நின்றது. வேதாரண்யத்தில் உப்பு ஏற்றுமதி பாதிக்கப்பட்டது. மீன்வளத்துறை எச்சரிக்கை எதுவும் விடுக்காததால் மீனவர்கள் வழக்கம்போல் கடலுக்கு சென்றுள்ளனர். இந்த மழை சம்பா மற்றும் தாளடி பயிர்களுக்கு ஏற்றது என விவசாயிகள் தெரிவித்தனர்.

நெல்லை: நெல்லை மாவட்டத்தில் இந்த ஆண்டு வடகிழக்கு பருவமழை நவம்பர் முதல் வாரம் தான் தொடங்கியது. ஆனால் இதுவரை போதிய மழை பெய்யவில்லை. இந்நிலையில் நெல்லை மாவட்டத்தில் நேற்று முன்தினம் நள்ளிரவு முதல் பரவலாக மழை பெய்தது. நாங்குநேரியில் அதிகபட்சமாக 104 மி.மீ. மழை பதிவானது.கோவை: கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு பலத்த மழை பெய்தது. இதனால் மேட்டுப்பாளையம் & கோத்தகிரி சாலையில் உள்ள ராமசாமி நகர் பள்ளத்தில் காட்டாறு பெருக்கெடுத்து தரைப்பாலத்தின் மேல் வழிந்தது. தரைப்பாலம் அருகே பெரிய மேல்மட்ட பாலம் கட்டும்பணி நடந்து வருகிறது. அதனால் தண்ணீர் செல்லமுடியாமல் நேற்று அதிகாலை தரைப்பாலம் உடைந்து ஊருக்குள் வெள்ளம் புகுந்தது. 50க்கும் மேற்பட்ட வீடுகளுக்குள் வெள்ளம் புகுந்ததால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டனர். தரைப்பாலம் உடைந்ததால் அந்தவழியாக போக்குவரத்து நிறுத்தப்பட்டது.

குமரியில் குளங்கள் நிரம்பின

நாகர்கோவில்: குமரி மாவட்டத்தில் கனமழை நீடித்து வரும் நிலையில் 599 குளங்கள் நிரம்பி வழிகிறது.குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக பலத்த மழை பெய்து வருகிறது. நேற்றும் காலை முதல் வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டதுடன் ஒரு சில இடங்களில் மழை பெய்தது. மாவட்டத்தில் நீடிக்கும் மழையின் காரணமாக பழையாறு, வள்ளியாறு, பரளியாறு, குழித்துறை தாமிரபரணி உள்ளிட்ட ஆறுகளில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடுகிறது. திற்பரப்பு அருவியிலும் அதிக அளவு தண்ணீர் கொட்டுகிறது.கலங்கல் நீருடன் அருவியில் கரைபுரண்டோடும் வெள்ளத்தால் சுற்றுலா பயணிகள் அருவியில் குளிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அணைகளில் பெருமளவு தண்ணீர் திறந்துவிடாத போதிலும் மழை வெள்ளம் கால்வாய்களில் பாய்ந்தோடுகிறது. மாவட்டத்தில் கடலோர பகுதிகளில் கடல் சீற்றத்துடன் காணப்பட்டது. கடலில் ராட்சத அலைகள் எழுந்து விழுந்தன.குமரி மாவட்டத்தில் மொத்தம் 2040 குளங்கள் பொதுப்பணித்துறை வசம் உள்ளது.  இவற்றில் 599 குளங்கள் முழுமையாக நிரம்பி மறுகால் பாய்ந்து வருகிறது. 829 குளங்கள் நிரம்பும் நிலையில் உள்ளன.

**உடுமலை,மடத்துக்குளத்தில் வேகமாக பரவுகிறது கோமாரி**

உடுமலை, : தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் கால்நடைகளை தாக்கும் கோமாரி நோய் பரவி வருகிறது. குறிப்பாக, கோவை, திருப்பூர், ஈரோடு மாவட்டங்களில் ஏராளமான மாடுகள் கோமாரிக்கு பலியாகி விட்டன. இதைத்தொடர்ந்து, அரசு உத்தரவின்பேரில், கால்நடை துறையினர் விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர். மாடுகளுக்கு தடுப்பூசியும் போட்டு வருகின்றனர்.

ஆனால், உடுமலை, மடத்துக்குளம் பகுதியில் எந்த நடவடிக்கையும் எடுக்காததால் கோமாரி வேகமாக பரவி வருகிறது. கண்ணாடிபுத்தூர், ரெட்டிபாளையம், பாப்பான்குளம், சாளரபட்டி உள்ளிட்ட கிராமங்களில் 50க்கும் மேற்பட்ட மாடுகள் பாதிக்கப்பட்டு, சாகும் நிலையில் உள்ளன. இதுபற்றி கால்நடை மருத்துவர்களுக்கு தெரிவித்தும் வரவில்லை என்கின்றனர் இப்பகுதி மக்கள். இதனால் தனியார்

மருத்துவமனைகளில் மருந்து வாங்கி கொடுக்கின்றனர்.

கண்ணாடிபுத்தூரில் நாச்சம்மாள் என்பவர் 5 கறவை மாடுகள் வளர்க்கிறார். 5 மாடுகளையும் கோமாரி தாக்கி உள்ளது. இதனால் இப்பகுதியில் ஆவினுக்கு பால் சப்ளை செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும் என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பிரச்னை குறித்து மாவட்ட கலெக்டரிடம் விவசாயிகள் முறையிட்டனர். கலெக்டரின் உத்தரவின்படி கால்நடைத்துறை இணை இயக்குனர் வாசுதேவன் வந்து கோமாரி பாதித்த பகுதிகளை பார்வையிட்டார். தடுப்பூசி உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டார்.இந்நிலையில் உடுமலை, அமராவதி வனச்சரகங்களில் உள்ள மலைக்கிராமங்களில் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கை தீவிரமாக நடக்கிறது. உடுமலை, திருமூர்த்திநகர்,ஈசல்திட்டு, குழிப்பட்டி, மாவடப்பு ,கோட ந்தூர்,ஆட்டுமலை, தளிஞ்சி,மஞ்சப்பட்டி,காட்டுப்பட்டி உள்ளிட்ட மலைவாழ் மக்கள் கிராமங்களில் ஆயிரக்கணக்கான ஆடு,மாடுகள் வளர்க்கப்படுகின்றன. அவற்றுக்கு கோமாரி நோய் தாக்காமல் இருக்க தடுப்பூசி உள்ளிட்ட தடுப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. காலநடை பராமரிப்பு துறை இணை இயக்குனர் வாசுதேவன் உத்தரவின் பேரில் 5 பேர் கொண்ட குழுவினர் இந்த நட வடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர்.

யானைகள், மான்கள் உள்ளிட்ட வன விலங்குகளுக்கு கோமாரி நோய் பரவாமல் தடுக்க இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. வனவிலங்குகளுக்கு கொடுக்கும் முக்கியத்துவத்தை கிராமங்களில் உள்ள கால்நடைகளுக்கு அதிகாரிகள் தருவதில்லையே என்று நோய் பாதித்த உடுமலை ,மடத்துக்குளம் வட்டார கிராமத்தினர் கவலை தெரிவித்தனர்.

கோமாரி தடுப்பு நடவடிக்கை

கால்நடைகளுக்கு ஏற்படும் கோமாரி நோய் தடுப்பு நடவடிக்கைகளை அவிநாசி அருகே கருவலூரில் ஊராட்சி நிர்வாகத்தினர் நேற்று மேற்கொண்டனர். திருப்பூர் மாவட்ட கலெக்டர் கோவிந்தராஜ் உத்தரவின்பேரில் அவிநாசி ஒன்றிய ஆணையாளர் பால்ராஜ்,வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜகோபால் ஆகியோர் மேற்பார்வையில் கருவலூர் ஊராட்சி மன்றத்தலைவர் அவிநாசியப்பன்

(திமுக)தலைமையில் கால்நடைகளுக்கு பரவி வரும் கோமாரி நோய்த்தடுப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதில், கருவலூர் நைனாம்பாளையம்,காளிபாளையம், அரசப்பம்பாளையம், மருதூர் உள்ளிட்ட பகுதிகளில் மாட்டுத்தொழுவத்தில் பிளீச்சிங் பவுடர், நோய்த்தடுப்பு மருந்துகள் தெளிக்கப்பட்டது. மேலும் கோமாரிநோய்த்தடுக்க தடுப்பூசி போடுவதன் அவசியத்தை விவசாயிகளுக்கு வலியுறுத்தி, கோமாரிநோய் தடுப்பு நடவடிக்கைகள் குறித்து அறிவுறுத்தப்பட்டது. இதில் கால்நடைமருத்துவர் சுசீலா, ஊராட்சி துப்புரவு தொழிலாளர்கள் அனைவரும் பங்கேற்றனர்.

## வரத்து குறைவால் பூண்டு விலை கிடுகிடு உயர்வு கிலோ ரூ100க்கு விற்பனை

சேலம், : இந்தியாவில் மத்திய பிரதேச மாநிலம் மன்சூர், நிம்மாட்சி, இந்தூர் உள்ளிட்ட பகுதிகளில் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. இந்த பகுதிகளில் இருந்து இந்தியா முழுவதும் டன் கணக்கில் பூண்டு அனுப்பப்படுகிறது. கடந்தாண்டு வடமாநிலங்களில் நல்ல மழை பெய்ததால், விவசாயிகள் எதிர்பார்த்த அளவில் பூண்டு நல்ல விளைச்சலை தந்தது. இதனால் கடந்த மே, ஜூன், ஜூலை, ஆகஸ்ட் மாதத்தில் பூண்டு விலை குறைந்து காணப்பட்டது. அப்போது ஒரு கிலோ பூண்டு ரூ40 முதல் ரூ50 என விற்பனை செய்யப்பட்டது. இந்நிலையில் கடந்த இரு மாதத்திற்கு முன்பு வட மாநிலங்களில் பெய்த மழையால் பூண்டு செடிகள் மழை நீரில் மூழ்கின. இதனால் பூண்டு விளைச்சல் குறைந்து, சேலம் மார்க்கெட்டுக்கு வழக்கத்தை காட்டிலும் வரத்து சரிந்தது. இதனால் பூண்டு விலை கிடுகிடுவென உயர்ந்து வருகிறது.

சேலம் செவ்வாய்பேட்டை பூண்டு வியாபாரிகள் கூறியதாவது: நடப்பாண்டு துவக்கத்தில் வடமாநிலங்களில் பூண்டு நல்ல விளைச்சலை தந்துள்ளது. இதனால் அங்கிருந்து தினசரி 50 டன் பூண்டு, சேலம் லீபஜார், செவ்வாய்பேட்டைக்கு வந்தது. கடந்த 4 மாதங்களுக்கு முன் ரூ40 முதல் ரூ50 என விற்பனை செய்யப்பட்டது. வட மாநிலங்களில் பெய்த மழையால் பூண்டு விளைச்சல் குறைந்துள்ளது. இதனால் வரத்து குறைந்து, விலை கூடியுள்ளது. நவம்பர் 1ம் தேதியின்போது ஒரு கிலோ பூண்டு ரூ70 முதல் ரூ80 என விற்கப்பட்டது. தற்போது

விலை கிடுகிடுவென உயர்ந்து கிலோ ரூ100 முதல் ரூ120 என விற்பனை செய்யப்பட்டது. அதே நேரத்தில் கடந்த 6 மாதங்களுக்கு முன் கொண்டு வரப்பட்ட பழைய பூண்டு கிலோ ரூ80 என விற்பனை செய்கிறோம். நீலகிரி பூண்டு ரூ140 முதல் ரூ160 என விற்பனை செய்யப்படுகிறது. இந்த விலை மேலும் அதிகரிக்க வாய்ப்புள்ளது. இவ்வாறு பூண்டு வியாபாரிகள் கூறினர்.

**மாடு திடீர் சாவு**

அன்னூர், : அன்னூர் - கோவில்பாளையம் அருகே உள்ள கொண்டையாம்பாளையத்தைச் சேர்ந்தவர் விவசாயி கிருஷ்ணசாமி(60). இவர் 5 மாடுகள் வளர்த்து வந்துள்ளார். கடந்த 10 நாட்களாக ஒரு பசு மாட்டிற்கு காய்ச்சல் மற்றும் கழுத்தின் கீழ் பகுதியில் கட்டி ஏற்பட்டு உடல்நிலை சரியில்லாமல் இருந்து வந்தது. அம்மாட்டிற்கு கால்நடை மருத்துவர் ஒரு வாரமாக சிகிச்சை அளித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று காலை அந்த மாடு இறந்து விட்டது.

கால்நடைகளுக்கு கோமாரி நோய் பரவிவரும் நிலையில் நடந்த இச்சம்பவம் இப்பகுதி விவசாயிகளிடம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

# இன்றைய வேளாண் செய்திகள்

## 25.11.2013

### மத்திய அரசின் கட்டுப்பாடுகளால் வெங்காயம் ஏற்றுமதி 86 சதவீதம் சரிவு



புதுடெல்லி,

அக்டோபர் மாதத்தில் வெங்காயம் ஏற்றுமதி 86 சதவீதம் குறைந்து 22,000 டன்னாக சரிவடைந்துள்ளது. இது சென்ற ஆண்டின் இதே மாதத்தில் 1.55 லட்சம் டன்னாக உயர்ந்திருந்தது. மத்திய அரசு வெங்காய ஏற்றுமதிக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதிதத்தே இதற்கு காரணமாகும்.

**விலை உயர்ந்தது**பலத்த மழையால் சேதம் மற்றும் கையிருப்பு குறைந்ததால் வெங்காயம் வரத்து குறைந்தது. இதன் காரணமாக உள்நாட்டில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.100 வரை விற்பனை செய்யப்பட்டது. இதனையடுத்து மத்திய அரசு உள்நாட்டில் சப்ளையை அதிகரிக்கவும், விலை உயர்வை கட்டுப்படுத்தவும் வெங்காயம் ஏற்றுமதிக்கு கடுமையான கட்டுப்பாடுகளை விதித்தது.

ஆகஸ்டு 14–ந் தேதி முதல் மத்திய அரசு ஏற்றுமதி செய்யப்படும் வெங்காயத்திற்கான குறைந்தபட்ச விலையை மூன்று முறை உயர்த்தி 1 டன்னுக்கு 1,150 டாலராக அதிகரித்தது. அதாவது இதற்கு குறைந்த விலையில் வெங்காயத்தை ஏற்றுமதி செய்ய முடியாது. சென்ற ஆண்டுடன் ஒப்பிடும்போது தொடர்ந்து மூன்று மாதமாக வெங்காய ஏற்றுமதி குறைந்துள்ளது. இதனையடுத்து தற்போது உள்நாட்டில் ஒரு கிலோ வெங்காயம் விலை ரூ.50–ரூ.60 என்ற அளவிற்கு குறைந்துள்ளது.எனினும், செப்டம்பர் மாதத்துடன் ஒப்பிடும்போது ஏற்றுமதி 3 ஆயிரம் டன் அதிகரித்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் ஏற்றுமதி 19,218 டன்னாக இருந்தது. நடப்பு நிதி ஆண்டின் முதல் ஏழு மாதங்களில் (ஏப்ரல்–அக்டோபர்) வெங்காய ஏற்றுமதி 11.56 லட்சம் டன்னிலிருந்து 7.38 லட்சம் டன்னாக குறைந்துள்ளது. உள்நாட்டில் விலை அதிகரிக்கத் தொடங்கியதால் ஜூலை மாதம் முதல் ஏற்றுமதி சரிவடைந்து வருகிறது. 2012–ஆம் ஆண்டில் வெங்காய உற்பத்தி 1.63 கோடி டன்னாக இருந்தது.

**<u>சப்ளை அதிகரிக்கும்</u>**உள்நாட்டில் வெங்காய சப்ளையை அதிகரிக்க இறக்குமதியும் செய்யப்படுகிறது. கரீப் பருவ வெங்காயம் சந்தைக்கு வரும்போது உள்நாட்டில் சப்ளை அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## குமரி மாவட்டத்துக்கு 27 வகை வெளிநாட்டு பறவைகள் வருகை மாவட்ட வன அதிகாரி தகவல்



நாகர்கோவில்

குமரி மாவட்டத்துக்கு 27 வகை வெளிநாட்டு பறவைகள் வந்துள்ளன என்று மாவட்ட வன அதிகாரி ரிட்டோ சிரியாக் கூறினார்.

வெளிநாட்டு பறவைகள் குமரி மாவட்டத்தில் சுசீந்திரம்–தேரூர் பறவைகள் பாதுகாப்பு பகுதி உள்ளது. இந்த பகுதியில் உள்ள தத்தையார் குளம், புதுகிராமம் குளம், தேரூர் குளம், புத்தளம், கோதண்டராமகுளம், மணக்குடி ஆகிய பகுதிகளுக்கு 55 வகை பறவை இனங்கள் உள்பட 95 வகை நீரைச்சார்ந்து வாழும் பறவைகள் வந்து தங்கி செல்வது வழக்கம்.

நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை வெளிநாட்டு பறவைகள் அதிக அளவில் வந்து தங்கி இருக்கும்.

ஆய்வு இவ்வாறு வரும் வெளிநாட்டு பறவைகள் குறித்து அறிய நவம்பர் மாதம் முதல் மார்ச் மாதம் வரை ஒவ்வொரு மாதமும் 4–வது ஞாயிற்றுக்கிழமை வனத்துறை சார்பில் ஆய்வு செய்து விவரம் சேகரிக்கப்படுவது வழக்கம்.

அதே போல் குமரி மாவட்ட வன அதிகாரி ரிட்டோ சிரியாக் தலைமையில் அதிகாரிகள் மற்றும் ஊழியர்கள் வெளிநாட்டு பறவைகள் வருகை குறித்து ஆய்வுப்பணியை மேற்கொண்டனர். காலை 6.30 மணி முதல் 9.15 மணி வரை இந்த ஆய்வு நடந்தது. அப்போது அவர்கள் தொலைநோக்கி கருவிகளை பயன்படுத்தி குமரி மாவட்டத்துக்கு வந்துள்ள பறவைகள் குறித்த விவரங்களை சேகரித்தனர்.

27 வகை வெளிநாட்டு பறவை

அதன்பிறகு மாவட்ட வன அதிகாரி ரிட்டோ சிரியாக் நிருபரிடம் கூறியதாவது :–

குமரி மாவட்டத்தில் வெளிநாட்டு பறவைகள் குறித்த ஆய்வுப்பணி நடந்தது. அப்போது வர்ண நாரை, முக்குழிப்பான் போன்ற உள்நாட்டு பறவைகளை பார்த்தோம். மேலும் ரஷியா, சீனா ஆகிய நாடுகளில் இருந்து 27 வகையான வெளிநாட்டு பறவைகளும் வந்து உள்ளதை கண்டோம். டிசம்பர் மாதம் முதல் வெளிநாட்டு பறவைகளின் வருகை எண்ணிக்கை அதிகரிக்கும். இதே போல்

ஒவ்வொரு மாதமும் 4–வது ஞாயிற்றுக்கிழமை ஆய்வு நடைபெறும்.இவ்வாறு வன அதிகாரி ரிட்டோ சிரியாக் கூறினார்.**பழைய ஆயக்கட்டு பகுதிகளுக்கு வைகை அணையில் இருந்து தண்ணீர் திறக்க வேண்டும் அரசுக்கு விவசாயிகள் கோரிக்கை** ஆர்.எஸ்.மங்கலம்,பழைய ஆயக்கட்டு பகுதி களுக்கு வைகை அணையில்இருந்து தண்ணீர்திறக்கவேண்டும்என்றுஅரசுக்குவிவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ள னர்.

விவசாய பருவம்: பருவமழை தொடர்ந்து பெய்தால் வைகை ஆற்றில் தண்ணீர் வர வாய்ப்பு உள்ளது. வைகை ஆற்றில் மணல் அள்ளியதால் ஏற்பட் டுள்ள பள்ளங்களில் தண்ணீர் நிரம்பும் வகையிலும், மழைநீர் கடைமடை வரை வரும் வகையிலும் வைகை ஆற்றில் உள்ள பேரணை, நிலையூர் கால்வாய் படுகணை, விரக னூர் மதகு அணை மற் றும் பார்த்திபனூர் மதகு அணை ஆகியவற்றில் உள்ள ஷட்டர் களை திறந்து வைக்க பொதுப் பணித்துறைக்கு உத்தரவிட வேண்டும்.

தற்போது ராமநாதபுரம், சிவகங்கை, மதுரை மாவட்டங் களில் வைகை பாசன பகு தியை சேர்ந்த கண்மாய்களில் ஓரளவு தண்ணீர் தேங்கியுள் ளது. மேலும் ஆற்றுப்படுகை, கண்மாய்கள் மற்றும் வயல் களில் மழைநீரால் அதிக ஈரப் பதம் காணப்படுகிறது. இந்த பருவம் தான் நாற்றுக்களை பாவுவதற்கும், மற்ற விவசாய பணிகளை மேற் கொள்ளவும் ஏற்றகாலமாகும். இதைவிட காலதாமதம் ஏற்பட்டால் பருவம் தவறிவிடும். மேலும் விவசாயத்தில் போதுமான மகசூல் கிடைக்காமல் பெருத்த நஷ்டம் ஏற்பட வாய்ப்பு உள்ளது.

வைகை தண்ணீர்

எனவே விவசாய பணிகளை உரிய காலத்தில் தொடங்கும் பொருட்டு முதற் கட்டமாக வைகைப்பாசன பழைய ஆயக்கட்டு பகுதிக ளான ராமநாதபுரம், சிவ கங்கை, மதுரை ஆகிய மாவட் டத்தில் உள்ள 1 லட்சத்து 36 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் பயன்பெற வைகை அணையில் இருந்து தண்ணீர் திறந்து விட உத்தரவிட்டு விவசாயிகள் வாழ்வில் ஏற்றம் பெற உதவ வேண்டும் என்று விவசாயிகள் மாவட்ட நிர்வாகம், தமிழக அரசுக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

**பெரம்பலூரில் முள்காடுகளாக மாறிவரும் ஏரிகள் தூர்வாரி சீரமைக்க விவசாயிகள் கோரிக்கை**



பெரம்பலூர், -

பெரம்பலூரில் முள்காடுகளாக மாறி வரும் பெரிய ஏரி உள்ளிட்ட 4 பாசன ஏரிகளை தூர்வாரி சீரமைத்து ஆழப்படுத்திடுமாறு பொதுப் பணித்துறைக்கு விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**<u>பெரிய ஏரி</u>**

பெரம்பலூரில் துறையூர் சாலையில் அரசு மருத்துவமனை மற்றும் அரசு மேல்நிலைப்பள்ளி அருகே பெரிய ஏரி உள்ளது. கோனேரி ஆற்றில் இருந்து ஜார்ஜ் வாய்க்கால் வழியாகவும், அரணாரை செல்லியம்மன், நீலியம்மன் ஏரியில் இருந்தும் பெரம்பலூர் பெரிய ஏரி நீர்வரத்தை பெறுகிறது. பழமையான இந்த ஏரிக்கு நீர்வரத்து ஜார்ஜ் வாய்க்கால் தற்போது கழிவு நீர்வெளியேற்று கால்வாயாக பயன்படுத்தப்பட்டு வருகிறது.

**<u>பாசன வசதி பெறும் ஏரிகள்</u>**

பெரம்பலூரில் இருந்து 17 கி.மீ. தொலையில்லாடபுரம் அருகே பச்சைமலையில் உச்சியில் உருவாகி செக்காத்தி பாறை ஆனைக்கட்டி அருவியில் இருந்து வரும் மழை வெள்ளநீரால்லாடபுரம், அம்மாபாளையம், ஈச்சம்பட்டி, குரும்பலூர், செஞ்சேரி, அரணாரை நீலியம்மன் செல்லியம்மன் ஏரி, பெரம்பலூரில் உள்ள

பெரிய, சிறிய ஏரிகள் துறைமங்கலம் ஏரி மற்றும் கவுல்பாளையம் ஏரி ஆகிய ஏரிகள் பாசன வசதி பெறுகிறது. பெரம்பலூரை அடுத்த எளம்பலூர் உள்ளிட்ட கிராமப் புறங்களில் உள்ள ஏரிகள் மகாத்மா காந்தி கிராம வேலை உறுதி அளிப்பு திட்டத்தின் கீழ்தூர் வாரி சீரமைக்கப்பட்டுள்ளது.

**<u>நிதி ஒதுக்கீடு இல்லை</u>**

பெரம்பலூர் நகராட்சி பகுதியில் இந்த திட்டத்தை செயல்படுத்த வழியில்லாத நிலையில் உள்ள பெரியஏரி, வெள்ளந்தாங்கி அம்மன் ஏரி, (சிறிய ஏரி) அரணாரை, மற்றும் துறைமங்கலத்தில் உள்ள ஏரிகள் தூர்வாரி சீரமைக்கப்படாமல் உள்ளது. இதற்கென்று பொதுப் பணித்துறையினர் சமீபத்தில் நிதிஒதுக்கீடு செய்யவில்லை. பெரம்பலூர் பெரிய ஏரி முட்புதர்கள் அடர்ந்து காணப்படுகிறது. மேலும் ஏரியில் இருந்து உபரிநீர் வெளியேறும் பகுதியில் உள்ள மதகுப்பகுதியும் முட்புதர்கள் படர்ந்து காடு, மேடாக கிடக்கிறது.

**<u>சீரமைக்க கோரிக்கை</u>**

இந்த ஆண்டு பருவமழை சரியாக பெய்யத்தவறியதால், பெரம்பலூர் பெரிய ஏரி, சிறிய ஏரி, துறைமங்கலம் ஏரி, நீலி யம்மன் ஏரி ஆகியவற்றில் உள்ள முட்செடிகள், நெய்வேலி காட்டாமணக்கு செடிகளை அகற்றி, தூர்வாரி சீரமைக்கவேண்டும் என்றும், மழைக்காலத்தில் சிறிதளவு நீர் தேங்கி நின்றாலும் நிலத்தடி நீர்மட்டம் உயர்ந்திடவும், பாசனத்திற்கும் வசதியாக இருக்கும் என்று தெரிவித்த விவசாயிகள், போர்க்கால அடிப்படையில் பெரம்பலூரில் உள்ள ஏரிகளை தூர்வாரி சீரமைக்கவேண்டும் என்று மாவட்ட கலெக்டருக்கும், பொதுப்பணித்துறையினருக்கும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை: முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு**



கூடலூர்,

நீர்ப்பிடிப்பு பகுதிகளில் மழை பெய்ததால் முல்லைப் பெரியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்து உள்ளது.

**நீர்ப்பிடிப்பு பகுதியில் மழை**

முல்லைப் பெரியாறு அணை நீர்ப்பிடிப்பு பகுதி களில் கடந்த சில நாட்களாக மழை பெய்யாததால் அணைக்கு நீர்வரத்து குறை வாக காணப்பட்டது. நேற்று முன்தினம் வினாடிக்கு 468 கன அடி வீதம் அணைக்கு தண்ணீர் வரத்து இருந்தது.

இந்த நிலையில் நேற்று முன் தினம் இரவில் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் பலத்த மழை பெய்தது. இத னால் அணைக்கு நேற்று நீர்வரத்து அதிகரித்து உள்ளது. அணையின் நீர்மட்டமும் ஒரே நாளில் அரை அடி அளவில் உயர்ந்து உள்ளது.நேற்று முன்தினம் 117 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் நேற்று 117.50 அடி யாக உயர்ந்தது. அணைக்கு வினாடிக்கு 1,517 கன அடி நீர்வரத்து உள்ளது. அணை யில் இருந்து வினாடிக்கு 467 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது. அணையில் 2 ஆயிரத்து 177 மில்லியன் கன அடி தண்ணீர் இருப்பு உள்ளது.

வைகை அணை

71 அடி உயர வைகை அணையின் நீர்மட்டம் நேற்று 44.39 அடியாக இருந்தது. அணைக்கு வினாடிக்கு 422 கன அடி தண்ணீர் வந்து கொண்டு இருக்கிறது. அணை யில் இருந்து வினாடிக்கு 60 கன அடி தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

அணையில் 1,314 மில்லியன் கன அடி தண் ணீர் இருப்பு உள்ளது. தேனி மாவட்டத்தில், உத்தம பாளையம் பகுதகளில் நேற்று முன்தினம் பலத்த மழை பெய்தது. கூடலூர் பகுதிகளில் பரவலாக மழை பெய்தது. கூடலூர் பகுதிகளில் பெய்த மழையால் நெல் அறுவடை பணிகள் பாதிக்கப் பட்டது.

நெல் விலை குறைவு: நெல்லின் கொள்முதல் விலையும் மழையை காரணம் காட்டி வியாபாரிகளால் குறைக்கப்பட்டது. நேற்று முன்தினம் 60 கிலோ கொண்ட நெல் மூட்டை ரூ.800-க்கு வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்டது. நேற்று ஈரப்பதத்தை காரணம் காட்டி 60 கிலோ எடை கொண்ட நெல் மூட்டை ரூ.750-க்கு கொள்முதல் செய்யப் பட்டது.நேற்று முன்தினம் பெய்த மழை அளவு விவரம் (மில்லிமீட்டரில்) வருமாறு:-பெரியாறு 2.2, தேக்கடி 10.2, கூடலூர் 10.5, சண்முகாநதி 95, உத்தமபாளையம் 72, சோத்துப்பாறை 32.

**சிதம்பரம் அருகே மரத்தில் விஷவண்டுகளால் பொதுமக்கள் அச்சம்**



சிதம்பரம்,

சிதம்பரம் அருகே துணிசிரமேடு மண்டபம் கிராமத்தில் சாலையில் உள்ள ஒரு மரத்தில் விஷ வண்டுகள் கூடு கட்டி வசித்து வருகிறது. இந்த விஷ வண்டுகளை அப்பகுதி சிறுவர்கள் கற்களை கொண்டு எரிவதால் சாலையில் செல்லும் இருசக்கர வாகன ஓட்டிகள் மற்றும் பாதசாரிகளை கடித்து வருகிறது. இதனால் அப்பகுதிகளில் வசிக்கும் பொதுமக்கள் விஷவண்டுவை கண்டு அச்சமடைந்துள்ளனர். எனவே, அப்பகுதி மக்கள் நலனைக்கொண்டு மரத்தில் உள்ள விஷ வண்டுகளை அழிக்க சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை